
www.padippakam.com

# கவிதாசரண்

தமிழில் படைப்பிலக்கிய மாத இதழ்

ஆகஸ்ட், 1993

விலை ரூ.3.



படிப்பகம்

www.padippakam.com

# நாற்று

வெள்ளையடித்த வீட்டில் விளக்கு வெள்ளமாய் ஒளிர்கிறது. கரி பிடித்த இருட் கிடங்கில் அது ஒளி மங்கி உள்வாங்கிக் கொள்கிறது. விளக்கு ஒன்றுதான். அது ஒளிரும் இடத்தில்தான் வேறுபாடு. வயதும் வாலிபமும் வெள்ளையடித்த வீடு போல. உயிர் தன் உச்சத்தில் ஒளிரும்.

ஃ

ஒவ்வொருவனும் தன்னையொரு போதகனாகப் பாவித்துக்கொண்டே பிறனை எதிர்கொள்கிறான். பிறனிடம் போதனை பெறும் பேதைமை தன்னில் இருக்கும் என்பதை மறந்துவிடவே முயல்கிறான். இந்த மறதி அங்கீகரிக்கப்படும்போது அவன் அரசியல்வாதியாகிறான். சுட்டிக் காட்டப்படும்போது அடியாளாகிறான். இருவருமே நடைமுறையில் ஈருடல் ஓருயிர்தான்.

ஃ

ஒருவர் மற்றவரை நேசிப்பது என்பது ஒருவரையொருவர் மதிப்பது என்னும் தளத்தில் இருக்க வேண்டும். ஒருவர் மற்றொருவரைப் பயன்படுத்திக் கொள்வது என்னும் தளத்தில் சுருங்கினால், முடிவில் ஒருத்தரை மற்றொருத்தர் தன் வாயில் மிஞ்சிய கருப்பஞ் சக்கையாகத் துப்பித்தான் துடைக்கும்படியாகும்.

ஃ

பற்றிக்கொள்ளும் இருவர் கைகள் பிறாண்டிக் கொள்ள நேர்வதுகூடப் பற்றுதலால்தானல்லவா!

ஃ

எழுத்தாளர்களில் பலர் மனித நயங்களைத் தாங்கள் கற்றுக்கொள்ளும் முன்பே பிறருக்குக் கற்பிக்கும் பணியில் இறங்கி விடுகிறார்கள் என்று படுகிறது. இல்லையேல், எழுத்தில் தரிசிக்கும்படியாய் வெளிப்பட முயல்கிறவர்கள் இயல்பில் பகையில் சுகம் வளர்ப்பதேன்?

படிப்பகம்

www.padippakam.com

கவிதாசரண்

*தமிழில் படைப்பிலக்கிய மாத இதழ்*

ஆகஸ்ட், 1993

மாதத்தின் முதல் வாரத்தில் வெளி வருகிறது.

தனி இதழ் விலை ரூ. 3.
ஆண்டுச் சந்தா ரூ. 36.
*சந்தாவை* M.O. *செய்க.*

மனித நேயம் வளர்க்கும் இலக்கியத் தெளிவின் ஊற்றுக்கண்.

---

*படைப்புகளை அனுப்ப மற்றும் தகவல் தொடர்புகளுக்கு:*

ஆசிரியர், கவிதாசரண்,
31, டி.கே.எஸ். நகர்,
சென்னை-600 019.

---

திறனாய்வுக்குப் புதிய நூல்கள் மட்டுமே ஏற்கப்படுகின்றன.

*இதழை 580,* T.H.Road, *சென்னை-21 இலிருந்து வெளியிடுபவரும் ஆசிரியரும்: கவிதாசரண். ஆல்வெல் பிரஸ், 31,* T.K.S. *நகர், சென்னை-19 இல் அச்சிடுபவர்: திருமதி கவிதாசரண்*

படைப்பாளர்களே தங்கள் படைப்புகளுக்குப் பொறுப்பேற்கிறார்கள்.

வெளியிடுவதற்கு ஏற்கப்பட்டவற்றைத் திருத்தவும் சுருக்கவும் ஆசிரியருக்கு உரிமை யுண்டு.

# 'தமிழன் என்று'

"தமிழன் என்றோர் இனம் உண்டு" என்றார் நாமக்கல் கவிஞர். மெய்யான பேச்சு.

காலத்தாலும் கலப்படமாகாமல் 'கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே முன்தோன்றி மூத்த குடி'யாக, மூக்கும் முழியும் நிறமும் உரமும் நன்றாகவே இனம் காட்டுகின்றன.

ஆயின் அவன் தனிக் குணம்? 'யாதும் ஊரே யாவரும் கேளிர் தீதும் நன்றும் பிறர்தர வாரா' என்னும் தெளிவில் இயைந்த அவனுடைய குணம் இன்றைய சுதேசி அரசியலில் சொறியும் சிரங்குமாய்ச் சீழ் பிடித்துப் போய், 'ஆற்றங் கரையின் மரமும் அரசறிய வீற்றிருந்த வாழ்வும்'போல் சரிந்து கிடக்கிறது. இருப்பினும் மானுட மூலத்தின் இழை இவனிடம்.

இன்று, இந் நாட்டில் இந்திய மக்கள் அனைவரையும் பரத குலப் புத்திரர்களாய்ப் பரிணாமப் படுத்த முனைத்திருக்கும் மூர்க்கம் இவனை அழித்து விடுமோ என்னும் அச்சம் பிறக்கிறது. அருகி வரும் உயிரினங்களைக் காக்கும் முயற்சிகள் உலகெங்கும் மேற்கொள்ளப் படுகின்றனவே! மானுட வரலாற்றின் அடிக் கணுவைப் பற்றி நிற்கும் இவனைப் பாரத புத்திரர்கள் பாதுகாக்கத் தவறினால், இந்தத் தேசத்து மக்கள் யாவரும் சொந்த தேசத்து மக்களாய் வாழ வேறு சிறந்த வழி இருப்பதாகப் படவில்லை.

படிப்பகம்

www.padippakam.com

என்னைத் தமிழ் அன்னை பெற்றாள்,
ஏடெடுத்து வாழ்ந்திருப்பேன்;
இன்னுயிரைத் தோற்ற பின்னே
என் குழியில் பூத்திருப்பேன்.

கவிதாசரண்
தமிழில் படைப்பிலக்கிய மாத இதழ்

மலர் இரண்டு ஆகஸ்ட், 1993 இதழ் எட்டு

# சமூகச் சீரழிவுகள்

இன்று சமுதாயத்தைச் சீரழிப்பவை அரசியலும் சினிமாவும்தான்.

இதனை அரசியல்வாதியும் சினிமாவாதியும்கூட மறுக்க மாட்டார்கள். காரணம் இவர்கள் தெரிந்தே சீரழிவைச் செய்கிறவர்கள்.

'சீரழிவு' என்னும் சொல் இவர்கள் கௌரவத்திற்குத் தகாத வார்த்தையாகப் படலாம்.

அதனால், இவர்களின் தாக்கத்தால்தான் சமுதாயம் புனர் ஜென்மம் எடுத்து வருவதாகப் பீற்றிக் கொள்வார்கள்.

புனர்ஜென்மம் என்பது உள்ளதைவிடவும் உயர்ந்ததாக இருக்க வேண்டும் என்பது நியதியா என்ன?

கழுதை கட்டெறும்பாவதும், கன்று பன்றியாவதும்கூடப் புனர்ஜென்மம்தான். இவர்களின் தாக்கத்தால் விளைந்த புனர்ஜென்மம் இத்தகையதுதான்.

இந்தியப் பொது வாழ்வில் இரண்டு முரண்பட்ட சமுதாயங்களை ஒப்புநோக்க நேர்வது ஒரு குரூரமான அனுபவம்!

ஒன்று, அன்னிய ஆதிக்கத்தோடு தீரமாகப் போராடி வென்ற சமுதாயம்.

மற்றொன்று, சுதந்திர தேசத்தில் பேரறிஞனும் சிற்றெறும்பாய்ச் சிறுத்துச் சீரழியும் சமுதாயம்.

படிப்பகம்

www.padippakam.com



சுயலாபம் கருதி ஆதிக்கம் செலுத்த வந்த அன்னியன் தன்னை எதிர்ப்பவர்களை சித்திரவதை என்ன, சிரச்சேதமே செய்வான் என்பதைத் தெற்றெனப் புரிந்து கொண்டே செயல் பட்டது முந்தைய சமுதாயம்.

அன்னியன்தான் என்றாலும் அவன் செயல்கள் சில நெறி முறைகள், நிர்வாகத் தெளிவுகள், அரசியல் நடைமுறைகளுக்கு வெளிப்படையாகக் கட்டுப்பட்டே இருந்தன.

அதன் காரணமாக, நியாயம் ஒருநாள் இவனைக் கட்டுப் படுத்தும் என்னும் நம்பிக்கை இந்திய சமுதாயத்தின் உறுதியை வளர்த்தது. அதனால் அல்லவா ஆயுதப் புரட்சியைத் தவிர்த்து, அகிம்சைப் புரட்சிக்குத் தன்னை அர்ப்பணித்துக் ள்ள முடிந்தது!

ஆனால் இன்று?

சுதந்திர இந்தியாவில் சட்டங்களுக்கொன்றும் குறைச்சலில்லை.

நம் அரசியல் சட்டம் ஒருவர் மீதொருவர்க்கு நம்பிக்கையின்மையைக் காட்டவென்றே வெகு நீளமாகப் புனையப் பட்டு, புதிய புதிய மாச்சரியங்களை அடையாளங் காட்டவென்றே புதிது புதிதாய்த் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு, இந்த ஜென்மத்தில் முழுமையுறப் போவதில்லை என்னும் பெருமைக்கு இலக்காக நிறையவே விதிகளை வழங்குகின்றது.

ஆனால் அவற்றை நடைமுறைப் படுத்துகிற மனிதன் தான் தொலைந்து போய்விட்டான்.

நிர்வாகம், அரசியல், பொது வாழ்வு எனும் மூன்று பரிமாணங்களையும் ஒரே பரிமாணமாக்கிக் கொண்ட அரசியல் வாதி மட்டுமே இன்று மிஞ்சியிருக்கிறான்.

அன்னியனை விட இன்றைய அரசியல்வாதிகள் வெல்லற்கரிய ஆதிக்கவாதிகளாகிவிட்டனர்.

விதிமுறைகள் வெறும் எழுத்துகளாய்ச் சிறுத்துவிட்டன.

நடைமுறைகள் எல்லா நெறி முறைகளையும் தின்று ஏப்பம் விடுகின்றன.

அன்னிய ஆதிக்கத்தில் உரிமையை மீட்க அனுபவித்த அவலங்களை விட ஆயிரம் மடங்குப் பேரவலங்கள் இன்று சமுதாயத்தில் பெருகி விட்டன.

சொந்த மனிதர்களிடமே சிறுமைப்படும் மக்கள்.

படிப்பகம்

www.padippakam.com



சிறுமை கண்டு பொங்கித் திரளும் உள்ளுறை சீற்றத்தைத் தொலைத்து விட்டவர்கள்.

அன்று, அன்னியன் தனிமைப் பட்டுத் தெரிந்தான்.

ஆனால், இன்று அரசியல்வாதி ஒவ்வொருவன் உள்ளேயும் சிம்மாசனம் போட்டுக்கொண்டு பங்காளியாக உட்கார்ந்திருக்கிறான்.

அவன் தாக்கத்திலிருந்து மீண்டு, மனிதனாய் முகம் காட்டி, நெறி முறைகளில் பற்று வைத்து, சக மனிதர்களின் துயருக்குருகி, நீசத்தனம் பற்றி ஆவேசமுற்று, பேரியக்கமாய்ப் பொங்கி எழுவது, தலையில்லாதவன் கண்ட கனவாகிப் போனது.

எதிர்ப்புக் குரல் எழும்போதே, குரலுக்குரியவன் காணாமல் போகும் வித்தை பொது வாழ்வில் நிலைபெறத் தொடங்கி விட்டது.

தேசம், மொழி, இனம், பண்பாடு, கலை என்பனவெல்லாம் சேவை என்பதின் பல பரிமாணங்களாய் இனங்கண்ட மனிதர்கள் அன்று அரசியல்வாதிகளாய் விளங்கினார்கள்.

இழக்கச் சித்தமாயிருந்தவர்களின் அணிவகுப்பு அது.

ஆனால் இன்று, அப்படியொரு சுரணையே இல்லாதவர்கள் அரசியல் பண்ணக் கிளம்பிவிட்டனர்.

எவன் ஒருவன் நெறிமுறைகளைத் தூக்கி எறிகிறானோ, அவன் மட்டுமே அரசியலுக்குத் தகுதியுள்ளவனாகிறான்.

எவன் ஒருவன் சமூகச் சழக்கர்களின் ஆளுயர மாலையைச் சுமக்கிறானோ, அவனே வெற்றிகரமான அரசியல்வாதி.

கடத்தல்காரனிலிருந்து கற்பழித்துக் கொல்கிறவன் வரை எல்லாப் பொறுக்கிகளிடத்தும் எவன் அஞ்சாமையை வளர்க்கிறானோ அவனே ஆண்மையுள்ள அரசியல்வாதி.

அப்படிப்பட்டவர்களால் காயடிக்கப்பட்டு, முனை மழுங்கி நினைவு தவறி, முடக்குவாதத்தில் இழுத்துக் கொண்டிருக்கும் அவல மிக்க சமுதாயத்தின் கௌரவமான குடிமக்கள் நாம்.

ஓர் அரசியல்வாதி ஊரறியப் புரியும் ஊழலைக்கூட உரத்துச் சொல்லி நியாயம் கேட்க எந்த உத்தமனும் அரசியலில் இல்லை என்பதுதான் இன்றைய மாபெரும் வெறுமை.

ஊழல்காரனை ஊழல்காரனே சுட்டும் போது, அந்த உண்மையின் தகிப்பு முற்றுமாய்ப் புதையுண்டு போய், சமு

படிப்பகம்

www.padippakam.com



தாயத்தைத் திசையறியாத் தனிமை வந்து பற்றுகிறதே, அது தான் இன்றையப் பேரவலம்.

ஊழல் குற்றத்துக் காட்பட்டு ஒரு அரசியல்வாதி பொறுப் பிலிருந்து விடுவிக்கப்படுகிறான். அப்படிப்பட்டவன் மக்க ளைச் சந்திக்க வெட்கப்படுவதே இல்லை.

“அடுத்து உங்கள் திட்டம் என்ன?” என்கிறான் பத்தி ரிகையாளன்.

“பொறுத்திருந்து பாருங்கள்,” என்கிறான் அந்த ஊழல் நாயகன்.

இவன் மீண்டும் பதவி பிடித்து, இதைவிடவும் பெரிய அள வில் நிகழ்த்தப் போகும் ஊழலைப் பார்க்க நாம் பொறுத்தி ருக்கத்தான் செய்கிறோம்.

தேசம் திகைப் பூண்டை மிதித்தது போல் திக்கற்று விழிக்கிறது. ஆனால் நம் அரசியல்வாதிக்குத் திசைகள் யாவும் தெளிவாய்த் தெரிகின்றன. சுயாதிக்கவாதிகளாய், மரணமே இல்லாமல் நிரந்தரமாய் வாழப் போகிறவர்களைப் போல் சொத்து சுகங்களைக் குப்பையாய் அள்ளிக் குவிக்கி றார்கள்.

இந்த நாடு விடுதலை பெற்றதிலிருந்து ஊழல் பற்றிய எத்தனை விசாரணைக் கமிஷன்கள் போடப்பட்டு விட்டன!

ஆனால், தண்டிக்கப்பட்ட அரசியல்வாதியை யாராவது பார்த்ததுண்டா?

அரசியல் குற்றவாளி சமூகத்தைக் கண்டு அஞ்சுவதில்லை.

சமுதாயம் அவனைக் கண்டு அஞ்சுகிறது.

வெள்ளைக்காரனே மேல் என்று பல்லில்லாத கிழவர்கள் சொல்லக் கேட்டதுண்டு. அடிமை மோகத்தாலா அப்படிச் சொல்ல நேர்ந்தது? அல்ல, அல்ல.

அது ஆற்றாமைப் பேச்சு. சுரணை கெட்ட சமுதாயத் தில் நியதிகளற்று, நியாயங்களற்று வாழச் சகியாமையின் வெளிப்பாடு.

இதற்கு விடிவு எப்போது?

❋

சீரழிவுக் காளான் வளர்ப்பில் அரசியல்வாதிகளை விட வும் கொடி கட்டிப் பறக்கிறவர்கள் சினிமாவாதிகள்தாம்.

சினிமாத் தொழில் நுட்பம் வளராத காலத்தில் அவர்கள் கதை சொல்லிக் கவரும் சினிமாக்காரர்களாயிருந்தார்கள்.

படிப்பகம்

www.padippakam.com



இன்றோ துக்கிரித்தனங்களை நுட்பவியல் நேர்த்தியோடு விற்றுமுதல் காணும் சினிமாவாதிகளாய் மாறிவிட்டனர்.

அன்றைய சினிமாக்காரனுக்கு சமூகம் பற்றிய கணிப்பும் அடிமைத்தனத்துக் கெதிராக மக்களை விழிப்புறுத்தும் வேட்கையும் விடுதலை கோரும் அரசியல்வாதிக்குத் துணையிருக்கும் துணிச்சலும் இருந்தன.

ஆனால் இன்று? சராசரி வாழ்க்கை அவலங்களைச் சகித்துக்கொள்வதற்கு மனத்தளவிலான மாற்றுத் துணையாக மனித குலத்தையே உட்கொண்டு நிற்கும் சினிமா ஊடகம், விடலைக் கனவுகளோடு வீட்டை விட்டோடும் பிள்ளையை வாரிச் சுருட்டித் தன் வயிற்றில் புதைத்துக்கொள்ளும் இருட்டுக் கிடங்காகிவிட்டது.

சினிமாவாதிகளிடம் சமூகப் பரிந்துணர்வு என்பது நாணயமான அரசியல்போலவே காணாமல் போன கேடயம்.

அத்து மீறிப் பாயும் கேளிக்கை வாளின் குறியற்ற வீச்சில் மனித முத்திரைகள் கிழிபட்டுத் தொங்குகின்றன.

எழுத்திலக்கியத்தை விடவும் மேலான புரிதலைத் தரும் காட்சி இலக்கியமாய் மானுடம் வளர்க்க வேண்டிய சினிமா, விஷத் தீண்டலால் நீலப் படங்களாகி வினியோகமாகிறது.

நம் படங்களில் நாயகனும் நாயகியும் தோழர்கள் பட்டாளத்தோடு அறிமுகமாகும் அழகு இருக்கிறது பாருங்கள்:

பாலியல் வக்கிரங்களாலேயே வார்த்தெடுக்கப் பட்டவர்களைப்போல் அப்படியொரு ஆட்டம் ஆடுவார்கள்.

இவர்கள் நிர்வாணமாய் நின்றால்கூட அத்தனை வக்கிரம் தோன்றாது.

தொனியற்ற நிர்வாணம் ஒரு தெய்வீக அழகு.

ஆனால் இவர்கள் உடை பிளந்து காட்டுவதும், இடை குழைத்து நொடிப்பதும், கண் சுழற்றி பார்வையால் நக்குவதும், வலிப்பு வந்தாற்போல உதடுகளைக் கோணிக்கொண்டு பாலுணர்வையே குஷ்ட ரோகமாய்ப் படிமப் படுத்துவதுமாக, இரவு விடுதியின் அதியந்தரங்கமான கேளிக்கை ஆடல்களையெல்லாம் வயல் வெளியில், பகல் ஒளியில், விலாவாரியாகப் படம் பிடித்துக் காட்டும் 'எய்ட்ஸ்' ஏஜெண்டுகள் இவர்கள்.

இப்படிக் குதிக்கும் நாயகி அடுத்த இரண்டு காட்சிகளில் தமிழ்ப் பண்பாடு பேசுவாள் பாருங்கள்; தமிழனாய்ப் பிறந்தமைக்காகத் தற்கொலை செய்துகொண்டால் தப்பே இல்லை என்றால் அது தப்பே இல்லை.

www.padippakam.com



நாட்டு விடுதலைக்குப் பின்னும், ஏதோவொரு எழுதப் படாத பொறுப்புணர்ச்சியோடே நகர்ந்து கொண்டிருந்த சினிமா உலகம், தெற்கத்தி இளைஞர்களின் திடீர்ப் படை யெடுப்பில், கலாச்சாரம் சார்ந்த கிராமீயக் காவியமாகவும் இளமை துள்ளும் காதல் ஓவியமாகவும் புதிய சகாப்தம்போல பிறவி யெடுத்த தென்னவோ உண்மை.

ஆனால் அதுவே மேல் வளர்ச்சி யில்லாமல், இன்றுவரை திரும்பத் திரும்ப, திருப்பித் திருப்பிச் சமைக்கப்படும் போது 'சுவை யேற்றுகிறேன் பேர்வழி' என்று சேர்த்த மசாலாக்க ளின் மலினமான வாசனை சகிப்புக்குள்ளான சமூக விபச்சா ரமாகப் பல்லிளித்துக் கொண்டிருக்கிறது.

சமூக நலம் பேணவோ, மனித ஆற்றலை நிலைப்படுத்த வோ, நம்பிக்கை வளர்க்கவோ, விடிவுக்காக விழித்திருக்கவோ மனிதர்களைத் தயார்ப்படுத்துவதில் இந்தச் சினிமாவாதிக ளுக்கு ஒரு பங்கும் இல்லை என்றே தீர்மானித்துவிட்டார்கள்.

காரணம், அவர்கள் மனத்தளவில் முதிராத விடலைக ளாகவே நின்று போன மார்க்கண்டேயர்கள்.

உண்மை அவர்கள் கற்பனைக்கப்பாற்பட்ட அன்னியம்.

ஒரு சின்ன விஷயம் பாருங்கள்:

சினிமாவில் அம்மா தன் மகனுக்காக இலை போட்டுச் சோறு பரிமாறி வைத்துக்கொண்டு உட்கார்ந்திருப்பாள். இதுவே நடைமுறைக்குப் புறம்பான காரியம். உண்பவன் உட்கார்ந்த பின்னர்தானே இலை போடலும் பரிமாறலும்? ஆனால், சினிமா அன்னை மிகவும் முற்போக்கானவள். அவ ளுடைய பிள்ளை அதைவிட முற்போக்கு. அவன் வேர்த்து விறுவிறுத்து வீட்டில் நுழைவான்.

"என்னப்பா இத்தனை நாழி? சரி, வா. வந்து சாப்பிடு," என்பாள் அந்தப் பாசமிகு தாய். தாய் சொல்லைத் தட்டாத தனயனும் அப்படியே உட்கார்ந்து சோற்றைப் பிசைந்து விழுங்குவான். வெளியிலிருந்து வந்தவன் கை கால் முகம் அலம்பி, குறைந்த பட்சம் கையையாவது அலம்பிக்கொண்டு சோற்றைத் தொட வேண்டும் என்ற சுரணை வேண்டாமா? இந்தச் சின்ன விஷயத்தைப் போதிக்க அரசாங்கம் செய்திப் படம் எடுக்க வேண்டிய நிலை.

சினிமாவாதிக்குச் சுத்தமான கையால் சுத்தமான பொரு ளை எடுத்துச் சுவைத்தது அவன் சொந்தத் தாயோடு சரி.

ஆனால் இவனே தன் கதாநாயகனுக்கு உண்டு முடித்த தும் மறவாமல் கை கழுவி விடுவான். கை கழுவி விடுவது

படிப்பகம்

www.padippakam.com



தானே அவன் தொழிலின் மூலதனம்?

அறிவியல் வளர்ச்சி பெருகப் பெருக மனிதனுடைய பிள்ளைப் பருவம் நீண்டு கொண்டே போகிறது என்பது இவர்கள் அறியாத உண்மை.

கோவலன்-கண்ணகி காலத்தில் ஆணுக்குப் பதினாறும் பெண்ணுக்குப் பன்னிரண்டும் பக்குவம் பெறும் வயதுகளாக இருந்தன. இன்றோ நீண்டு வரும் கல்விப் பருவத்தால் வாழ்க்கையை எதிர்கொள்வதற்கான வயதாக ஆணுக்கு இருபத்தைந்தும் பெண்ணுக்கு இருபத்தொன்றுமாக கணிக்கப்பட்டுள்ளன.

இதுபற்றியெல்லாம் சினிமாவாதிக்குக் கவலையில்லை.

இவனுடைய நாயகனும் நாயகியும் எட்டாம் வகுப்பு ஒன்பதாம் வகுப்பு பிள்ளைகளாகவே, முடிந்தால் இரண்டொரு வயது குறைவாகவே இருப்பார்கள். அவர்கள் புரியும் காதலும் லேசுப்பட்டதா என்ன? தொடக்கூடாத இடங்களிலெல்லாம் தொட்டு விளையாடி, கட்டிப் புரண்டு, போர்த்திப் படுத்து, மறைத்துப் புதைந்து, பார்வையாளனைப் பாலியல் காட்டேறியாக்கும்படியான தெய்வீகக் காதல்.

இவர்கள் செய்ய வேண்டிய புதுமை இன்னும் ஒன்று உண்டு.

இனி, நர்சரி வகுப்புக் குழந்தைகளைக் காதலன்-காதலியாக்கி, சமுதாயத்திற்குச் சாப விமோசனம் அருள்வதுதான்.

அரசியலும் சினிமாவும் இப்படித்தான் நமது இரு துளை மூக்கின் சுவாச இழைகளாகிக் கோலோச்சுகின்றன.

சினிமாவிலாவது சில வேளைகளில் விதிவிலக்குகளைப் பார்க்க முடிகிறது.

ஆனால், அரசியலில் விதியும் இல்லை; விலக்கும் இல்லை.

இதற்கு விடிவே கிடையாதா?

ஏன் இல்லாமல்?

ஒவ்வொருவனுள்ளும் ஒளிந்து கொண்டிருக்கும் அரசியல்வாதியை நாம் உதைத்து வெளியேற்றும் போது,

நீசத்தனமான அரசியல்வாதியின் வெறி மிக்க வேட்கையின் பிரதிபலிப்பாக வரும் சினிமாவை மோகித்து, கூச்சநாச்சமின்றித் துணிக்குள் கை நுழைத்து அரங்கேறி சொறிந்து கொள்வதை அடித்து அப்புறப்படுத்தும்போது விடிந்தே தீரும்.

இப்போது நாம் வளர்த்துக்கொள்ள வேண்டுவது விடிவை வேண்டும் வேட்கையைத்தான். ஃ

படிப்பகம்

www.padippakam.com

? ?

## உற்பாதம்

நீரின்றி, பயிர் கரிய
நாட்கணக்கில் நாங்கள்
பரிதவித்து,
பட்டினி கிடக்கப் போவதன்
உற்பாதக் குறியீட்டு
நிகழ்வானதே
தலைவியே! உன்றன்
நான்கு நாள்
முன்னுதாரண
உண்ணாவிரதம்!

/ தி.கமலி /

படிப்பகம்

www.padippakam.com

# அந்த விரல்

இலக்குமி குமாரன் ஞானதிரவியம்

அதற்கு
முதன்முதலாக
மோதிரம் அணிவிக்கப்பட்டவுடன்
நான்கும் மகிழ்ந்தன கைக்கழகென்று.

பிறகு–
பிடிக்கிறபோது மோதிரம் தேயுமென்று
விலகிற்று அது.

கிணற்றில் தண்ணீர இறைக்கும்போதும்
பேருந்தில் கம்பி பிடிக்கும்போதும்
காய்கறிப் பையைத் தூக்கி வரும்போதும்
அது மட்டும் விலகிநின்று விடைத்தது.

நாளாக நாளாக—
விலகல் அந்நியமாகி,

மோதிரத்தைக்
கிரீடமென்று அறிவித்துக் கொண்டது.

அதுதான் அழகென்று
நான்கும் சம்மதித்து
அதற்குரியதையும் சேர்த்துச் சுமந்தன.

எனவே,
அது
மோதிர விரலாயிற்று.

*ஆழத்தை ஒளித்து வைத்துக்கொண்டு அழகு காட்டும் பளிங்கு நீராய் எளிமை புனைந்து நயம் காட்டும் இக்கவிதை போலவே இக் கவிஞர் நடத்தும் ''மவ்னம்'' காலாண்டு கவிதை இதழும். நல்ல கவிதைகளைத் துய்க்கவும் படைக்கவும் தொடர்பு கொள்ளலாம்தானே: 7/19-பி, ''நடேசம்'', அத்திவெட்டி-614613.*

படிப்பகம்

www.padippakam.com

தொடர் 7

## வல்லிக்கண்ணன்

# நினைவுத் தடங்கள்

'இப்பவே நவசக்தி ஆபீசுக்குப் போய் என்ன பண்ணப் போகிறோம்? புரபசர் சுவாமிநாதனையும் இன்றே பார்த்து விடலாமே. அவர் வீடு இந்தப் பக்கம்தான் இருக்கிறது' என்று திருலோக சீதாராம் சொன்னார்.

அவரும் நானும் பல இடங்களில் சுற்றித் திரிந்துவிட்டு மயிலாப்பூர் திரும்பிக் கொண்டிருந்தோம். அப்போது இரவு ஏழு மணிக்கு மேல் ஆகியிருந்தது.

'பார்க்கலாமே' என்றேன்.

புரபசர் கே. சுவாமிநாதன் பிரசிடென்சி காலேஜில் இங்கிலீஷ் புரபசராகப் பணியாற்றிக் கொண்டிருந்தார்.

—இப்போது, பேராசிரியர் கே. சுவாமிநாதன் மாநிலக்கல்லூரியில் ஆங்கிலப் பேராசிரியராகப் பணியாற்றிக் கொண்டிருந்தார் என்று எழுதுவதே இயல்பாக இருக்கும்.

புரபசர் பேராசிரியர் என்றும், பிரசிடென்சி காலேஜ் மாநிலக் கல்லூரி என்றும் எழுத்து வழக்கில் வருவதற்கு அநேக வருடங்கள் தேவைப்பட்டன அப்போதெல்லாம், யுனிவர்சிட்டி என்பது சர்வகலாசாலை என்றே எழுத்திலும் பேச்சிலும், குறிப்பிடப்பட்டது. பலப்பல வருடங்களுக்குப் பிறகே பல்கலைக் கழகம் என்ற சொல் வழக்கத்துகக்கு வந்தது. இப்படி எத்தனையோ மாற்றங்கள் மெது மெதுவாகத் தலை காட்டி வளர்ந்திருக்கின்றன. மாநிலம் என்பது கூட பிற்காலத்தில்தான் வழக்குச் சொல் ஆயிற்று. அதற்கு முன்பு பிரசிடென்சி என்றால் மாகாணம் தான். ராஜதானி எனவும் எழுதப்பட்டு வந்தது.

புரபசர் சுவாமிநாதன் பெயர் பெற்ற ஆங்கிலப் பேராசிரியர். தமிழிலும் அவர் எழுதிக் கொண்டிருந்தார். 'கட்டை வண்டி' என்று அவர் எழுதிய நாடகம் மிகுந்த கவனிப்பையும் பாராட்டுதலையும் பெற்றிருந்தது.

அது பின்னர் புத்தகமாகப் பிரசுரம் பெற்றது. நவயுகப் பிரசுராலயம் வெளியிட்ட சிறுநூல். அதில் சுவாமிநாதன் எழுதியிருந்த 'சமர்ப்பணம்' புதுமையாக இருந்தது.

'மீனுக்குத் தண்ணீரில் நீந்தவும், தமிழனுக்குத் தமிழில் எழுதவும் கற்றுக் கொடுக்கவா வேண்டும்? சும்மா எழுதய்யா தமிழிலே

படிப்பகம்

www.padippakam.com



என்று எனக்கு உற்சாக மூட்டிய டி. கே. சிதம்பரநாத முதலியார் அவர்களுக்கு' என்று அந்த 'சமர்ப்பணம்' தெரிவித்தது.

அதிலிருந்து அவர் உற்சாகமாகத் தமிழில் கட்டுரைகள் எழுதலானார். 'ஆனந்த விகடன்' தீபாவளி மலர், 'கலைமகள்' ஆகியவற்றிலும் மற்றும் விசேஷ வெளியீடுகளிலும் அவரது கட்டுரைகள் வெளிவந்தன.

'கிராம ஊழியன்' பொங்கல் மலருக்கு கு. ப. ராஜகோபாலன் அவரிடம் கட்டுரை கேட்டிருந்தார். அதை நினைவு படுத்துவதற்காகவே திருலோகம் அவரைக் காண விரும்பினார.

புரபசர் எங்களை இன்முகத்துடன் வரவேற்றார். அவருடன் ஒரு மாணவர் இருந்தார். 'இவர் வி. எஸ். சுப்பையா. பிரசிடென்சி காலேஜில்தான் படிக்கிறார்' என்று அவரை எங்களுக்கு அறிமுகப்படுத்தினார் பேராசிரியர்.

திருலோகம் என்னைப் பற்றிக் கூறினார்.

வி. எஸ். சுப்பைய்யா மிகுந்த மகிழ்ச்சியுடன் 'உங்கள் எழுத்துக்களை நான் படித்திருக்கிறேன். எனக்கும் திருநெல்வேலி ஜில்லா தான். வீரவநல்லூர் என் சொந்த ஊர்' என்று என்னிடம் கூறினார்.

புரபசர் பொதுவாகப் பல விஷயங்கள் பற்றிப் பேசினார். அப்போது இரண்டு பெரிய மனிதர்கள் உள்ளே வந்தார்கள். 'வாங்க' என்று வரவேற்ற பேராசிரியர், 'உட்காருங்களேன்' என்றார். வாசல் அருகிலேயே நின்ற அவர்கள் 'இல்லே, நாங்க போகணும்' என்றார்கள்.

புரபசர் எழுந்து அவர்கள் அருகே போய் நின்று, அவர்களோடு பேசலானார். நாங்கள் மூன்று பேரும் மரியாதை காட்டும் வகையில் எழுந்து நின்றோம்

சிறிது நேரம் பேசிய பின்னர் அவ்விருவரும் விடை பெற்றுச் சென்றார்கள். எங்கள் அருகில் வந்ததும், 'இவர்கள்தான், வையாபுரிப்பிள்ளையும் பெ. நா. அப்புஸ்வாமியும். நெருங்கிய நண்பர்கள். பக்கத்து பக்கத்துத் தெருக்களில் குடியிருக்கிறார்கள்' எப்பவும் இரண்டு பேரையும் சேர்த்தேதான் பார்க்க முடியும். வாக்கிங் போய்விட்டு வருகிறார்கள். அப்படியே இங்கே எட்டிப் பார்த்துவிட்டுப் போகிறார்கள்' என்று தெளிவு படுத்தினார் பேராசிரியர்.

பெ. நா. அப்புஸ்வாமி விஞ்ஞானக் கட்டுரைகள் (இப்போது அறிவியல் கட்டுரைகள்) எழுதிப் பெயர் பெற்றிருந்தார். பெரிய விஷயங்களை, எளிய தமிழில், எல்லோருக்கும் புரியக் கூடிய விதத்தில் இனிமையாக— கதை போல—எடுத்துச் சொல்லும் திறமை அவருக்கு இருந்தது. பல பத்திரிகைகளிலும் இப்படி அவர் எழுதிய கட்டுரைகளில் சில 'அற்புத உலகம்' என்ற புத்த

படிப்பகம்

www.padippakam.com



கமாகத் தொகுக்கப்பட்டிருந்தன. ரொம்ப ரசமான நூல். ஒரு பதிப்புடன் மறைந்து போன அரிய நூல்களில் அதுவும் ஒன்று.

பெ. நா அப்புஸ்வாமி 'பேனா' என்ற பெயரிலும் எழுதுவ துண்டு. அவரும் டாக்டர் மாணிக்கம் என்பவரும் சேர்ந்து எழு திய 'மின்சாரத்தின் விந்தைகள்' என்பது எளிய தமிழில் வெளி வந்த மற்றுமொரு நல்ல புத்தகம்.

இவை 1940 களின் ஆரம்பத்திலேயே வந்துவிட்டன.

வையாபுரிப் பிள்ளை ஆய்வுக் கட்டுரைகள் எழுதிவந்தார்.

திருலோகசீதாராமும் நானும் புரபசரிடம் விடை பெற்று வெளியே வந்தோம். நாங்கள் சிறிது தூரம் போவதற்குள் ளேயே வி. எஸ். சுப்பையாவும் வேகமாக நடந்து வந்து எங்க ளோடு சேர்ந்து கொண்டார்.

வி. எஸ். சுப்பையா பின்நாட்களில் அகில இந்திய ரேடியோ வில் (பின்னர், அனைத்து இந்திய வானொலி) பணியாற்றினார். என் நண்பரானார். எனக்கு அவ்வப்போது ரேடியோவில் வாய்ப் புகள் கிடைக்கச் செய்தார். பிறகு ஐ. ஏ. எஸ். தேர்வில் வெற்றி பெற்று தமிழ்நாடு அரசுத்துறை ஒன்றில் அதிகாரியாகிப் பணி புரிந்தார். எல்லாக் காலத்திலும் சிறுகதைகள் எழுதிக் கொண் டிருந்த இவர் பின்நாட்களில் சில நாவல்களும் எழுதியதுண்டு.

என்னை சந்திக்க நேர்கையில், திருநெல்வேலி ஜில்லாவின் கிராமங்கள் கொஞ்சம் கூட முன்னேறாமல் எவ்வளவு பிற் போக்குத் தனமாக இருக்கின்றன என்று வி. எஸ். சுப்பையா வருத் தத்தோடு பேசுவது வழக்கம்.

---

## அத்திவெட்டியான்

### தீட்டுக் களி

சாப்பிடப் போனால்
மட்டை பிடித்துக்கொள்ள வேண்டும்.

தண்ணீர் எடுத்துத் தருகையில்
செப்புக்குடம்தான் எடுக்க வேண்டும்.[1]

குழந்தை சிரிக்கையில்
"சிரிக்கிறாங்கோ சின்னாச்சி"
என மரியாதை காட்டவேண்டும்.

வாசல்படி தாண்டி
கால் பட்டுவிட்டால்
வண்ணாத்தி வரவேண்டும்.[2]

ஆனால்,

பனந்தூரடியில் மாலைக் கருக்கலில்
இருட்டில் கரையும் தீட்டு.

---

[1] மண்குடத்தைப் பறைச்சி தொட்டால் தீட் டாம். செப்புக் குடம் தொடலாமாம்.

[2] வண்ணாத்தி வந்து, வீடு முழுக்க நடந்து துணிமணிகளைத் தொட்டுவிட்டால் தீட்டு கழிந்துவிடுமாம்.

தீட்டுக் களி = குச்சு வீட்டில் தூமை பருகும் திருடன்கள்.

படிப்பகம்

www.padippakam.com

## வித்யாஷங்கர்

## கவிதைகள்

★

மனிதப் புதர்கள் பெருகி
எங்கும் துரத்த
ஏகாங்கியானேன்;
எங்கும் பச்சை,
எதிலும் ஈரம்.

ஏகாங்கியாய்
எப்போதும் இருக்க
ஏதேனும் திரவம்
உள்ளுக்குள்
நுரைத்தும் பொங்க
வேண்டியிருக்கிறது.

நிதானத்தில்
அறியப்பட முடியாத
மனிதம்
போதையில் மலர்கிறது
மணம் வீசி.

உணர்வு வந்தாலோ
அவரவர் பைக்காசும்
அவரவர் வேலையுமாய்
அந்நியப்படுதல்
தவிர்க்க முடியவில்லைதான்.

இருந்தாலும்
தனக்குத் தான்
அந்நியப்படல்தான்
அவஸ்தையிலும் அவஸ்தை.

★

இரும்புச் சாலை
நொண்டிக் கால்கள்
கவலை கடந்த
காதல் சோகம்
உருவோ உயிரோ
உனக்கே புரியும்.

★

வாழ்க்கைக்காக எவ்வளவோ
விசனப்பட்டாயிற்று.

நாமில்லாத வாழ்க்கை
நமக்கில்லை.

★

கஞ்சிக்கு கவி மறுக
எண்ணம் கோடி
எழுது எழுது என்கும்.

★

கை குலுக்க நீண்ட கைகளை
கை கட்டி மறுதலித்தேன்.

என்
கைகள் தேடும்போதோ
எங்கும் வெற்றுவெளி.

★

நுகத்தடிக்குப்
பழக்கப்பட்ட காளைகள்
திறந்த வெளியைக்
கண்டதும் மிரண்டு
பிள்ளை விளையாட்டு
கலைக்கும்.

★

ஆளற்ற தடம்
அடையும் இடத்தைத்
தொலைவு படுத்தும்.

★

எல்லார்க்கும்
இவர்களின் விருதாவான
வாழ்க்கை பற்றி
விமர்சனம் உண்டும்.

இருந்தாலும் கழற்றி வைத்த
மனசாட்சியாய்
கண்ணில் பட்டு
உறுத்தாமலிருப்பதில்லை
இவர்கள்.

படிப்பகம்

www.padippakam.com

# வருகை

## எம்.எஸ்.சண்முகம்

ஒண்டியம்மாள் எல்லோரையும் உறவு சொல்லித்தான் கூப்பிடுவாள். அப்படியும் அவள் இந்தக் குடும்பத்துக் காரியல்ல. ஒண்டியம்மாளுக்கு எல்லோர் மீதும் பிரியம் இருந்தது. கவிழ்ந்த இருட்டுள்ள நாளில் அவளும் அவளுடைய அம்மாவும் தம்பியுமாக, மேட்டுப்பட்டிக்கு வந்து சேர்ந்தார்கள். ஒண்டியம்மாள் வயசுப் பெண். வசீகரமான அழகு. அவளை வீட்டின் தொழுவத்திலே தங்க வைத்தது ஆத்தாதான்.

மாவில்பட்டியிலிருந்து மேட்டுப்பட்டிக்குப் பிழைக்க வந்த தேவமார் குடும்பம் அது. ஒரு வகையில் திருமால் தேவரின் சம்பந்தி வழி. இரவில் வந்த அவர்கள் ஆத்தாளிடம் வந்து,

''எங்கெ தொழுவிலேயே குடியிருந்துக்கிட்டு இந்த ஊர்லே வேலெ வெட்டி பாத்து பெழச்சிக்கிருறோம். கொஞ்சம் எடங் குடுங்க,'' என்று கேட்டார்கள்.

ஆத்தாளும் ஐயாவிடம், ''நம்மௌ நம்பி வந்திருச்சுகெ. சும்மா கெடக்கிற வீட்டைத் தூத்துத் தொளிச்சு வெளக்குப் பொருத்தட்டும்'' என்றுசொல்லி சாவி வாங்கிக் கொடுத்தாள்.

தம்பி பெயர் பொன்னு. பதினைந்து வயதிருக்கும். வரிச்சிக் கம்பு போன்ற உருவம். தாய் மாரியம்மா. வயது ஐம்பதைத் தாண்டும். சூது வாதில்லாதசுபாவம். நல்ல பாட்டாளி.

காட்டு வேலையை முடித்து வந்த சூட்டிலேயே வீட்டு வேலையையும் முடித்துவிடுவாள் ஒண்டியம்மாள். அவ்வளவுதான். ஆத்தாளிடம் ஓடி வந்துவிடுவாள். இங்கும் ஆத்தாள் அக்காள்மார்கள் செய்யும் வேலைகளிலெல்லாம் சேர்ந்து டணி புரிவாள். வேலையில் பம்பரமாய் சுழல்வாள்.

அய்யாவை மாமா என்றும் ஆத்தாளை அத்தை என்றும் அக்காள்மார்களை மதினி என்றும் தம்பியைக் கொழுந்தனார் என்றும் உறவு கூறியே அழைத்தாள். அவளது அந்த உறவில் உரிமையும் கலந்திருந்தது. பாசமும் தொனித்தது.

இரவு தம்பியும் அக்காள்மார்களும் புது வீட்டின் முன்பத்தியில் படுத்துக் கொள்வார்கள். ஒண்டியம்மாளும் அக்காமார்களுடன் வந்து படுத்துக் கொள்வாள்.

ஒருநாள் சாமத்தில் பெரியக்காள் விழித்துப் பார்க்கும் போது, ஒண்டியம்மாளைக் காணோம். விளக்கை ஏற்றிக் கையிலெடுத்துக் கொண்டு தேட, அவள் அடுப்பு வீட்டுத் திண்ணையில், திருமால்தேவர் தம்பி கருப்பசாமியோடு ஒரே படுக்கையில் படுத்துத் தூங்கிக் கொண்டிருந்தாள்.

இந்தக் காட்சி அக்காளின் மனதைக் குமட்டியது. கருப்பசாமி அண்ணனும் பிரியமானவர்தான். ஆனால் இப்படி நடந்து கொண்டது என்னவோ அக்காளுக்கு அருவெறுப்பாகத் தெரிந்தது.

கருப்பசாமி அண்ணனுக்கு ஆத்தா ஐயா கிடையாது. எல்லாமே சகோதரர் திருமால் தேவர்தான். முதலாளி வீட்டில் வருஷ சம்பளத்திற்கு ஆடு

படிப்பகம்

www.padippakam.com



மேய்த்துக் கொண்டிருந்தார். மூன்று வேளைச் சாப்பாடும் அங்கேயேதான். அண்ணன் பெண்டாட்டி சரியாக கவனிக்க மாட்டாள். அங்கே நிலைமையும் அப்படித்தான். நல்லது பொல்லது என்றால் ஆத்தாள் தான் வரச்சொல்லி சாப்பாடு போடுவாள்.

ஆத்தா அந்த அண்ணனுக்கு மதினி முறைதான். சில நாட்களில் அவரே வந்து,

''சோறு போடுங்க மதினி'' என்று உட்கார்ந்து விடுவார். 'நாதியத்த பய'லென்று ஆத்தாளும் நன்றாகவே செய்வாள். யார் பனையில் நுங்கு கிடந்தாலும் சரி இரவோடு இரவாக குலை குலையாய் வெட்டிவந்து அக்காளுக்குக் கொடுப்பார்.

தெருவில் யார் இறந்தாலும் இரவு கருப்பசாமி அண்ணனின் பாரதம் ராமாயணம் வாசிப்பு உண்டு. நல்ல ராகத்தோடுதான் வாசிப்பார். புஸ்தகத்தை கொடுப்பார்கள். பக்கங்களை புரட்டிக் கொண்டே படிப்பார்.

ஒரு நாள் இப்படிப் படிக்கும் போது புஸ்தகம் தலைகீழாய் இருந்தது. அதையும் பக்கம் பக்கமாகப் புரட்டிக் கொண்டுதான் படித்தார். துஷ்டிக்கு வந்த வெளியூர்க்காரர் ஒருவர் இதைப் பார்த்து ஆச்சரியப்பட்டுப் போனார்.

''நானும் எத்தனையோ எடத்திலே பாரதக்கதை வாசிக்கிறதெ கேட்டிருக்கேன். இப்படி தலைகீழெ படிக்கிறதெ பார்த்ததே இல்லே.'' என்றார்.

எல்லோரும் 'கொல்' என்று சிரித்துவிட்டார்கள். பிறகுதான் தெரிந்தது அவருக்குப் படிப்பு வாசனையே கிடையாது, கேள்வி ஞானத்தால் இப்படி படிக்கிறார் என்பது.

ஊரில் வள்ளித்திருமண நாடகம் போட்டால் கருப்பசாமி அண்ணன் முருகனாக நடிப்பார். வில்லடிப்பாட்டு பாடினால் பக்கப் பாட்டுக்கு சேர்த்துக் கொள்வார்கள்.

ஒருவகையில் இந்த அண்ணன் மீது கோபப்படவும் அக்காளுக்கு மனமில்லை. ஒண்டியம்மாளும் பாசக்காரிதான். வீட்டு வேலையில் பாதியை அவள் செய்வாள். தண்ணீர் எடுக்கப்போனால்கூட தானும் நடைக்கு வருவாள். அவள் மீது அவர்களுக்குப் பரிவுதான் ஏற்பட்டது.

திருக்கார்த்திகை அன்றைக்கு ஒண்டியம்மாள் ஒட்டுப் புல்லை கை நிறையக் கொண்டு வந்து இந்த அண்ணனின் பம்பைத் தலை மீது தேய்த்தது அக்காளுக்கு நினைவு வந்தது.

இந்த அண்ணன் அடிக்கடி தொழுவத்துக்குப் போய் அவளிடம் பீடி பத்த வைக்க கங்கு கேட்பது ஞாபகத்திற்கு வந்தது. ''முன்பெல்லாம் நம்ம வீட்டிலை கேட்கிற அண்ணன் இப்போது மட்டும் அங்குப் போய் கேட்பானேன்,'' என்று எண்ணினாள்.

ஓணாப்பட்டி கண்மாயில் அண்ணன் ஆடு மேய்த்துக் கொண்டிருந்தால், ஒண்டியம்மாள் அவளது மூணு குட்டி சீனி ஆட்டை கயிற்றைக் கட்டி இழுத்துக் கொண்டு ''கருவக்காய் பறிக்கப் போறேன்,'' என்று கண்மாய்க்குள் போவதையும் அண்ணன் கூட சிரித்துப் பேசிக் கொண்டு வீடு திரும்புவதையும் பார்த்திருக்கிறாள்.

பெரிய நந்தவனத்துப் பக்

படிப்பகம்

www.padippakam.com



கம் அண்ணன் ஆடு மேய்த்துக் கொண்டிருந்தால், ஒண்டியம் மாள் ''விறகு பொறக்கப் போறேன்''னுசொல்லிவிட்டு அங்கே ஏன் போகிறாள்? ''கண்மாயில் இல்லாத விறகா நந்தவனத் திலே இருக்கு?'' என்று தன் னையே கேட்டுக்கொண்டாள்.

பெரிய நந்தவனத்தில் சித் திரவேலு பண்டார மாமா தான் ஏற்றம் இறைப்பார். அந்தக் கருப்பாயி அத்தைதான் தண்ணீர் விலக்கும். அந்த அத் தைகூட ஒரு நாள் ஆத்தாளி டம் ''கருப்பசாமிக்கு ஒண்டி யம்மாளை கல்யாணம் செய்து வச்சிற வேண்டியதுதான்,'' என்று சிரித்துக் கொண்டே சொல்லும் போது அக்கா கூட இருந்தாள்.

'செட்டியார் வீட்டு மக மாயி பாட்டி செத்ததற்கு கருப் பசாமி அண்ணன் பாரதம் வாசிச்சது. வீட்டுக் காரங்கெ சிவனேன்னு கிடக்கும் போது ஒண்டியம்மாள் எதுக்கு அந்த ராத்திரியிலே கடுங்காப்பி போட்டுக் கொண்டு வந்தா?'

இப்படிப் பல நிகழ்ச்சிகள் கோர்வையாக அக்காளின் மனத்திரையில் விழுந்து கொண் டிருந்தன.

அக்காள் தன் படுக்கையில் வந்து படுத்துவிட்டாள். உட னடியாக விளக்கையும் அணைத் துவிட்டாள். அவளுக்கு தூக் கமே வரவில்லை. புரண்டு புரண்டு படுத்தாள்.

தலைக்கோழி கூப்பிட்டது. பின் கதவு திறக்கும் சத்தம் கேட்டது. அவரை அனுப்பி விட்டு ஒண்டியம்மாள் வந்து அக்காளின் அருகே படுத்துக் கொண்டாள். அக்கா இதை எல்லாம் கவனித்துக் கொண்டு தானிருந்தாள். பதினைந்து நாட்களுக்கு முன்னர் ஒருநாள் பின் வாசல் வழியே வெளியே செல்ல நேரிட்டது. அன்றே கதவு திறந்துதான் கிடந்தது. ''பூட்ட மறந்து வுட்டோம் போலும்,'' என்று அக்கா எண்ணிக் கொண்டாள்.

ஆனால் அது ஒண்டியம்மா ளின் வேலைதான் என்பது இப் போதுதான் அவளுக்குத் தெரிந் தது. ஆக, இந்த விஷயம் பல நாட்களாக நடை பெற்று வருகிற தென்பது அக்காளுக்கு உறுதியாயிற்று.

நினைக்க நினைக்க இது அக்காளுக்கு பயமாகவே இருந் தது. இன்னும் சற்று ஆழமாக நினைத்தாள். அவளுக்கு தலை சுற்றியது. ஆனால் ஒண்டியம் மாளோ குரட்டை போட்டுத் தூங்கினாள்.

விடியவும் இதை பெரியக்கா ஆத்தாளிடம் சொன்னாள். ஆத்தாள் அய்யாவிடம் சொன் னாள். இருவரும் கொஞ்ச நேரம் தனித்துப் பேசிக்கொண் டிருந்தார்கள்.

''இது வெளியே தெரிஞ்சா இந்தப் பிள்ளைக்கு கேவலம். எவனும் கெட்ட மாட்டா. இவ னும் கல்யாணங் காட்சி இல் லாமெ ஊர்க்காடு மேஞ்சிகிட் டுத் திரியிறான். அதுகளோ

படிப்பகம்

www.padippakam.com



நம்மளெ நம்பி அண்டி வந்திருச்சுதுகெ. அவுகெ ஆத்தாட்டைச் சொல்லி, இந்தக் கருப்பசாமி பயலுக்கே இந்தப் பிள்ளையெக் கட்டி வச்சிற வேண்டியதுதா,'' என்றாள் ஆத்தா.

அக்காவை அனுப்பி ஒண்டியம்மாளின் ஆத்தா மாரியம்மாளை அய்யா அழைத்து வரச் சொன்னார். கொஞ்ச நேரத்தில் மாரியம்மா வந்தா.

''இப்படி உக்காரம்மா.'

''இருக்கே அண்ணே.''

ஆத்தா, மாரியம்மாளிடம் நேற்று இரவு நடந்த விஷயத்தையும் இவர்கள் எடுத்துள்ள முடிவையும் கூறி அதற்கு உன் அபிப்ராயம் என்ன வென்று கேட்டாள்.

''ஒங்கெ இஷ்டப்படி செய்யுங்க மதினி. நீங்களும் அண்ணனும் பாத்து என்ன செய்தாலும் சரி. எனக்கு இந்த ஊர்லெ வேறெ யாரு இருக்கா.''

''அப்பெ இன்னிக்கு ராத்திரி நாங்க பெண்ணு கேட்டு வர்றோம். வெத்தலை கை மாத்திகிருவோம். நாளைக்கு நின்னு பொதன் கிழமை ராத்திரி கலியாணத்தை பண்ணிக்கிருவோம்'' என்றார் அய்யா.

''ஒரு கம்மலு மூக்குத்தி போடக் கூட ஏங்கிட்டெ வக்கில்லெ.''

''ஏதுக்கு? அதெல்லா ஒண்ணும் வேண்டாம்மா. ரெண்டு பேரும் கை காலு தெடமா இருக்காங்க. ஒழச்சுப் பெழச்சிகிருவாங்கெ. கல்யாணத்தை எப்படியோ நாங்க முடிச்சி வச்சிருறோம்.''

''ஒங்க மனசு போலெ செய்யுங்கண்ணே.''

இரவு வெற்றிலை, பாக்கு, ஒரு முழப் பூவோடு, ஆத்தா, அய்யா, திருமால்தேவர், அவரது பெஞ்சாதி, பெத்தண்ண மாமா, குருசாமிப் பாட்டையா எல்லோரும் தொழு வீட்டுற்குப் போனார்கள். வெற்றிலை கைமாறி புதன் கிழமை கல்யாணம் என்று நிச்சயம் செய்தார்கள்.

ஒண்டியம்மாள் தலையில் பூ வைத்து நெற்றியில் திலகமிட்டு அய்யா ஆத்தா கால்களில் விழுந்து கும்பிட்டாள். ''மகராசியாயிரு.'' என்று ஆசீர்வதித்து திரும்பினார்கள்,

புதன் கிழமை காலையில் அய்யா, திருமால்தேவர், மாப்பிள்ளைகாரர் மூவரும் இரண்டு சாக்குப் பைகளைத் தூக்கிக் கொண்டு சாத்தூர் சென்றார்கள். மூன்று மணிக்கெல்லாம் சர்க்கரைப் பூசணி, வாழைத் தார், இலைக்கட்டு சாக்கு மூட்டை, கோடிச் சேலை வேஷ்டியோடு திரும்பினார்கள்.

புது வீட்டின் மேற்கேயுள்ள காலியிடத்தில் சமையலுக்கு ஆயத்தம் செய்தார்கள். 'ஏற்கனவே அந்த இடத்தில் காய்ந்த விறகு கட்டைகள் அடுக்கி வைக்கப் பட்டிருந்தன. இளவட்டமார்கள் பெரிய கற்களைத் தூக்கி வந்து அடுப்புக் கூட்டினார்கள்.

படிப்பகம்

www.padippakam.com



சிலர் தெருவில் வீடு வீடாய்ப் போய் அண்டா, கொப்பரை, சருவம், மொடா போன்ற பெரிய பெரிய பாத்திரங்களைக் கொண்டு வந்து சேர்த்தார்கள்.

குமரிப் பெண்களெல்லாம் குடமும் வாளியும் தூக்கிக் கொண்டு கிணற்றிற்குச் சென்றார்கள். கொஞ்ச நேரத்தில் பாத்திர பண்டங்களெல்லாம் நீர் நிரம்பிற்று.

பாட்டிமார்கள் அரிவாள் மனைகளைத் தேடி எடுத்துக் காய்கறி நறுக்கினார்கள்.

ஆத்தா, வீட்டிலிருந்து முக்குருணி அரிசி எடுத்துக் கொடுத்தாள். அய்யா சம்சாரி வீடுகளிலிருந்து பற்ற வைக்க பருத்தி மாரு வாங்கி வநது போட்டார். மாப்பிள்ளையும் அவரது அண்ணன் திருமால் தேவரும் முதலாளி நாயக்கர் தோட்டத்திலிருந்து இரண்டு வாழைமரங்களைக் கொண்டு வந்து முன் வாசலில் கட்டினார்கள்.

பூக்கார மாரிமுத்துப் பண்டாரம் இரண்டு மாலைகளையும் பத்து முழம் மல்லிகைப் பூவும் காலே அரைக்கால் படி உதிரிப் பூவும் கொண்டு வந்தார்.

மூன்று அடுப்புகள் எரிந்தன. ஆள் ஆளுக்கு வேலை பார்த்தார்கள். சட்டென்று சமையல் முடிந்தது. சாதம், பருப்புக் குழம்பு, பூசனிக்காய் புளிக்கறி, வாழைக்காய் பொறியல், பூசணிக்காய் பச்சடி. அவ்வளவுதான்.

நடுவீட்டில் ஆத்தாள் குத்து விளக்கேற்றினாள். விளக்குக்கு முன் கிழக்கே பார்த்து பொண்ணும் மாப்பிள்ளையும் உட்கார்ந்தார்கள். அய்யா மாலையை எடுத்துக் கொடுத்தார். தம்பதிகள் மூன்று முறை மாலையை மாற்றிக் கொண்டார்கள். தெருப் பெண்கள் ஒன்று போல குளவையிட்டனர். மஞ்சள் கயிற்றில் சிறிய மஞ்சள் துண்டு ஒன்றைக் கட்டி மாப்பிள்ளை தாலி கட்டினார்.

மணமக்கள் பெரியவர்கள் காலில் விழுந்தார்கள். அவர்கள் விபூதி பூசி வெள்ளி ரூபாய் கொடுத்தார்கள். தம்பதிகளுடன் குமரன் குமரிகள் கோவிலுக்குச் சென்று கிராம தேவதைகளுக்கு தேங்காய் விடலை எறிந்தனர்.

வீட்டு முற்றத்தில் ஏகாலி மாற்று விரித்தான். பெண்கள் இலை போட்டுத் தண்ணீர் வைத்தார்கள். இள வட்டங்கள் பந்தி பரிமாறினார்கள். பந்தி முடிந்தது.

நார்ப் பெட்டியில் வெற்றிலை பாக்கு வைத்துக் கொண்டு பெத்தண்ண மாமா திருப்பிச் செல்கின்றவர்களுக்கு கொடுத்துக் கொண்டிருந்தார்.

மாமியார் புதிய கோரைப் பாயும் ஒரு நீண்ட தலையணையும் கொண்டு வந்து கொடுத்தாள். அன்று இரவு அவர்கள் அங்கீகாரம் பெற்ற தம்பதிகளாக படுக்கைக்குச் சென்றனர். ●

படிப்பகம்

www.padippakam.com

க.அம்சப்ரியா

## வீடு

வெய்யிலுக்கும் மழைக்கும்
கவலையில்லை.

ஒதுங்கி நிற்கலாம்
தைரியமாய்-

வந்தவர் போனவர்
உட்கார்ந்து போக
மடக்கிப் போடும்
சேருமுண்டு-

வயிற்றுப் பசியைத்
துரத்தியடிக்க
கடனில் வாங்கிய
அரிசியும், பருப்புமுண்டு-

விடிந்தெழுந்தால்
வேலைக்குப் போகலாம்.

இருள் படிந்தால்
கூட்டிற்கு வரலாம்.

எவருமில்லை
எப்போதோ போய்
இப்போதா வருவதென
முகம் சுளிக்க-

ஆடைகளற்று
நித்திரையாகலாம்
எவரின் களங்கமுமின்றி.

எனினும்,

அலையும் மனதை
இழுத்துப் பிடிக்க
மனிதர் தேடி
மனிதர் தேடி
ஏங்கிப்போகும்
தினப் பொழுது.

## நடைப் பிணங்கள்

தளர்ந்த நடையாய்
வீரியம் மிக்கதாய்
ஒளியற்றுக் கொஞ்சம்
வேசமிட்டுக் கொஞ்சம்
கல்லறைகளிலிருப்பதை
விடவும் அதிகமாய்
பிணங்கள்
பிணங்கள்
ஊர் முழுக்க!



## பண்டிகை

வெற்றுக் கூச்சல், ஆரவாரம்,

குறைகள் இறைஞ்சிய
வேண்டுதல்களின் தவிப்பு,
நேரம் போக்க
வேடிக்கை பார்க்கும்
கேலிப் பார்வைகள்,
உள்ளுக்குள் மூழ்கி சில-
மூழ்கியதாய் காட்டி சிலவென
தேருக்குப் பின்னால்
பூவோடும்
மாவிளக்கும் தொடர-
சாமி போவார்
அலட்சியமாய்...!

படிப்பகம்

www.padippakam.com

# தாய் மொழியும் தந்தை மொழியும்

மா. அரங்கநாதன்

கோவில் என்ற விஷயத்தை எடுத்துக்கொண்டால், வட நாட்டில் அப்படி என்று எதுவுமே கிடையாது என்று சொல்லிவிட முடியும். வேதங்களிலோ, இதிகாசங்களிலோ கோவில் சென்று வணங்கியோர் இல்லை. வேதங்களின் வணக்கம் இந்திரனுக்கும் மற்றுமுள்ள மித்ர, வருணனுக்கும் செல்கிறது. விஷ்ணு என்னும் தேவன் இந்திரனின் வேலைக்காரன் என்று கூறப்படுபவர் தான். சிவனைப் பற்றி இழிவாகப் பேசப்படுகிறது. இலிங்கத்தை வணங்கும் மக்கள் நீசர்களாகச் சித்தரிக்கப்படுகின்றனர். வேதத்தில் குறிப்பிடப்படும் ருத்ரன் சிவன் அல்ல என்பதும் கவனிக்கப்பட வேண்டியதாகும். (பார்க்க: ரிக் வேத சுலோகம் 7-12-5 மற்றும் 10-99-3)

கோவில் என்று ஏற்பட்டதே தென்னகத்தில் தான். சங்க காலத்தில் கோவில் பற்றிய குறிப்புகள் இல்லை. சிலப்பதிகாரத்தில் பிறவா யாக்கை பெருமான் என்று சிவன் கோவில் சொல்லப்படுகிறது. ஆனால் தமிழின் எல்லா இலக்கியங்களிலும் பூசனை குறிப்பிடப்படுகிறது—திருக்குறள் உட்பட.

கரிகாலன் கட்டிய கல்லணை இன்றைக்கு இருக்கும்போது, அந்த மன்னன் வாழ்ந்த அரண்மனை எங்கே? என்னவாயிற்று? என்ற கேள்வி நியாயமாகவே எழும். அவை எங்கேயும் போய் விடவில்லை. இந்தப் பழங்காலக் கோயில்கள் யாவும்தாம் அரண்மனை என்ற முடிவைத் தரும். அது உன்மைதான். ஓர் அரண்மனையில் மன்னன் வணங்கி வந்த இடம்தான் கருவறை. மீதியுள்ள இடங்களாக நாம் இன்று காண்பவை ஓர் அரண்மனைக்குரிய சாயலில் அமைக்கப்பட்டது தான். கோபுரம், ஆயிரங்கால் மண்டபம், சுரங்க அறை, நகைகள் பாதுகாக்கப்படுமிடம், பிரகாரத்தில் இருக்கும் வாகன அறைகள், மடப்பள்ளி, பெரிய மதில்- யாவும் அரண்மனைக்குரியவை.

இவையெல்லாம் ஆய்வாளர் மேற்கொண்டு பல சங்கதிகளை அளித்துள்ளனர். என்றாலும்

படிப்பகம்

www.padippakam.com



கோவில் இல்லாத சமயத்தில், அதாவது சங்க காலம் என்று வைத்துக்கொள்வோம், அப்போது கருவறையில் இருந்து மன்னனால் வணங்கப்பட்ட தெய்வம் எது?

தெய்வம் என்ற சொல்தான் எதைக் குறிக்கிறது? எம் மொழிச் சொல் அது? வடமொழியில் கூறப்படும் பிருத்வி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம் என்னும் பஞ்ச பூதப் பெயர்களிலே தேயு என்றால் நெருப்பு. அதற்குரிய சமஸ்கிருதச் சொல் 'அக்னி'. எதற்காக அதைத் 'தேயு' என்று சொல்ல வேண்டும்? அது இனக் கலப்பால் நேர்ந்த ஒரு விஷயம்-ஒரு தந்திரமான போக்கு. பூர்வ குடிமக்களின் மொழியை ஆரியரால் ஏற்றுக்ககாள்ளாமல் இருக்க முடியாது போயிற்று. 'தீ' என்பதே தேயு ஆனது. அக்னி ஐரோப்பிய மொழி சார்ந்தது.

இருக்கட்டும்- இவ்வாறு கோவிலில், அதாவது அரண்மணையில் நெருப்பையோ, நெருப்பின் சாயலில் லிங்கத்தையோ, நடுகல்லையோ வணங்கி வந்த மன்னனைப் பின்பற்றி மக்களும் வணங்க, பின்னர் அவர்களுக்காகக் கட்டப்பட்டது தான் கோவில். ஆரம்பத்தில் வணங்கிய இடம் அரண்மனை தான். கோவில் என்ற தமிழ்ச் சொல்லின் பொருளும் அதுவே.

கோவில் ஏற்பட்ட பின்னரும் இந்திரனுக்கும் அவனைப் போன்ற மற்றவர்க்கும் இந்த நாட்டு மக்களின் வணக்கம் கிடைக்கவில்லை. எனவேதான் இக்கடவுளரை ஆரியர் ஸ்வீகாரம் செய்தனர். பூர்வ குடி மக்களின் தெய்வங்கட்குத் தங்கள் தங்கள் வழக்கங்களை ஏற்படுத்திக் காட்டி, பலரும் நூல்கள் செய்தனர்- சங்கரர் உட்பட. இல்லையென்றால் பிறவா யாக்கைப் பெருமானும் முருகவேளும் முப்புரி நூல் அணிவிக்கப்படுவார்களா? விஷ்ணு காசியப கோத்திரக்காரரானார். ஆனால் விஷ்ணு என்ற சொல்லே 'விண்' என்ற சொல்லிலிருந்து பெற்றதாக சேஷ ஐயங்கார் முதல் இன்றைய இந்திரா பார்த்தசாரதி வரை சொல்லியாகிவிட்டது.

இவ்வாறான கோவில் எப்போது தோன்றியிருக்க முடியும்? ஊர் என்ற இடம் ஏற்பட்ட பின்னர். ஊர் என்பது விவசாயம் தோன்றிய பின்னர். விவசாயத்தை உயரிய தொழிலாக முதன் முதல் கொண்ட மக்களும் இடமும் எவையென விஞ்ஞானிகள் சொல்ல வேண்டுமேயொழிய, வேதம் சொல்கிறது, புராணம் சொல்லிற்று என்று கூறும் கதா-காலட்சேப பம்மாத்துக்காரர்கள் அல்லர்.

நீரைத் தேக்கி விவசாயம் ஆரம்பிக்கப்பட்ட முதலிடங்களாக எகிப்து, தென்னிந்தியா, இலங்கை என்று என்சைக்ளோபீடியா பிரிட்டானிக்காவில் படிக்கலாம். (இன்னும்)

படிப்பகம்

www.padippakam.com

# நெருப்புக்கேது அழுக்கு?

## முத்து நிலவு

இரவு பத்து மணி இருக்கும். கடற்கரைச் சாலையில் உள்ள அந்தச் சந்தில் நான் ஒதுங்கியபொழுது தெற்கிலிருந்து வடக்கு நோக்கி ஒரு ரிக்ஷா வந்து கொண்டிருந்தது. விளக்குக் கம்பத்தை நெருங்கிய போது, பின்னால் உறுமிக் கொண்டு வந்த ஒரு மோட்டார் சைக்கிள் அதன் குறுக்கே வந்து நின்றது. ரிக்ஷா நின்று விட்டது. மோட்டார் சைக்கிளில் வந்தவன் வண்டியைவிட்டு இறங்கினான். ரிக்ஷாக்காரன் தன் வண்டியை நிறுத்தினான். சில வினாடிகளுக்குப் பின் ரிக்ஷாவிலிருந்து ஓர் இளைஞனும் அவனைத் தொடர்ந்து ஓர் யுவதியும் இறங்கினர்.

நான் அந்தச் சந்திலேயே நின்றுகொண்டு அவர்களை உற்று நோக்கினேன். அவர்கள் எனக்கு அறிமுகமானவர்களல்லர். ஆனால் பலமுறை பார்த்திருக்கிறேன். மோட்டார் சைக்கிளில் வந்தவன் எம். ஏ. படித்தவன் என்று கேள்வி. ஏதோ ஒரு கம்பெனியில் வேலை பார்த்துக்கொண்டிருந்தான்.

அந்த இரவில், தெரு விளக்கின் மங்கிய ஒளியில் தெரிந்த அம்மூவரின் முக பாவங்களையும் என்னால் சரியாகப் பார்க்கமுடியவில்லை. இளைஞனும் யுவதியும் ஏதோ நெருப்பின் மேல் நிற்பவர்களைப் போல எனக்குப்பட்டது. இளைஞனை விட அந்த யுவதி இரண்டொரு வயது மூத்தவளாகத் தோன்றினாள். அவர்கள் இருவரும் அந்த எம். ஏ. யின் முன்னால் தலை தாழ்த்தி நின்றனர்.

ரிக்ஷாக்காரன் அவ்விடத்தை விட்டு அகன்று, நான் இருந்த சந்தின் பக்கமாக ஒதுங்கி வந்து உட்கார்ந்து கொண்டு, தன் காதில் செருகியிருந்த பீடித்துண்டை எடுத்துப் பற்ற வைத்துக் கொண்டான்.

சிறிது நேரம் அங்கே நிலவிய அமைதியை அந்த எம். ஏ. கலைத்தான். தன் தொண்டையைக் கனைத்துக் கொண்டு "கடைசியில் இப்படிச் செய்யத்தானா எல்லாம்!" என்றான். அந்தக் கேள்வி எந்த உணர்ச்சியில் கேட்கப்பட்டது என்பதை என்னால் விளங்கிக் கொள்ள முடியவில்லை. ஆனால், அந்தக் குரலில் ஓர் ஆண் மகனின் கம்பீரமான தொனி இல்லை. அதை உணர்ந்தவேகத்தில் அவன் என்னவோ எடுத்து நிறுத்த முடியாதபடி தாழ்ந்து போனவன் என்று மனதில் பட்டது. அந்தப் பெண் தரையைப் பார்த்துக் கொண்டு நின்றாள்.

"ஏன் இப்படிச் செய்தாய் என்று எனக்குப் புரியவில்லை, மாலா. நமக்குக் கல்யாணமான

படிப்பகம்

www.padippakam.com



இந்த ஐந்து வருஷ காலத்தில் உன் மனம் நோகும்படி நான் ஒரு வார்த்தை பேசியதில்லை. உன் முகம் சாம்பும்படி ஒரு காரியமும் செய்ததில்லை. உன் காரியத்தில் நான் ஒரு நாளும் தலையிட்டதில்லை. உன் இஷ்டப்படியே நீ வாழ்ந்தாய். இன்று உன் இஷ்டப்படியே புறப்பட்டுவிட்டாய். கடைசியில் எனக்கு நீ செய்ததும், நான் உன்னிடமிருந்து பெற்றதும் இதுதான் இல்லையா?''

மீண்டும் அமைதி. அந்த அமைதியைக் கிழித்துக் கொண்டு ஒரு கார் இரைச்சலுடன் அவ்வழியே ஓடியது. அவன் மேலும் பேசினான்:

''இத்தனைக்கும் நம் கல்யாணம் பெற்றோர்கள் மாத்திரமே நிச்சயம் செய்ததல்ல. நாமும் நிச்சயம் செய்ததுதான். நீயும் நானும் நேசித்தே கல்யாணம் செய்து கொண்டோம். ஐந்து ஆண்டுகள் ஒன்றாகவே வாழ்ந்திருக்கிறோம். அவ்வளவையும் ஒரு நொடியில் சிதைத்துவிட்டு இந்த இளைஞனோடு புறப்பட்டுவிட்டாய். ஐந்து மாதத்திற்கு முன் எதிர் வீட்டில் தங்க வந்த இந்த இளைஞன் உனக்குத் துணையாகி விட்டான். ஐந்தாண்டு வாழ்க்கை முடிந்துவிட்டது. நானும் தனித்துவிட்டேன்.''

ரிக்ஷாக்காரன் மீண்டும் ஒரு பீடியை எடுத்துப் பற்ற வைத்துக் கொண்டான். அவன் ஒரு ரசிகன் போலும். வாயைக் குவித்துக் கொண்டு புகை வளையங்கள் விட்டான். ஆனால், வேகமாக வீசிய காற்றில் அவ்வளையங்கள் சிதறுண்டு போயின.

''முந்தாநாள்தான் ஒரு விஷயம் சொன்னாய். அதை மறந்துவிட்டாயா மாலா?'' என்றான் அந்த எம். ஏ. அது வரை தலையைத் தொங்கப் போட்டுக் கொண்டிருந்தவள் அவனை நிமிர்ந்து பார்த்தாள். அந்த இளைஞனும் நிமிர்ந்து பார்த்தான்.

''மறந்துதான் போனாய். இது உனக்கு மூன்று மாதம்.''

யுவதி சட்டென்று அந்த இளைஞனின் கையைப் பற்றிக் கொண்டு, ''சீ...இதைக் கேட்க வெட்கமாயில்லை? உம்மோடு ஐந்து கணங் கூட வாழ்ந்ததில்லை. உமக்கு அதில் சம்பந்தம் இல்லை என்பதை உம்மால் தாங்கிக் கொள்ள முடிந்தது. அதனால்தானே நான் வெளியேறினேன்?'' என்று பொரிந்தாள். இளைஞன் வெற்றிச் செருக்கோடு நின்றான்.

ரிக்ஷாக்காரன் 'தூ' வென்று காரியுமிழ்ந்தான். ''நீ ஒரு பொட்டைப் பயன்னு தெரிஞ்சுக்க அந்தப் பொண்ணுக்கு அஞ்சு வருஷமாச்சு. அந்த ஆள் ஆம்பளை சிங்கம்டா,'' என்று சற்று வாய் விட்டே சொன்னான்.

''ஆல்ரைட். ஆல்ரைட். உன் தைரியத்தை மெச்சுகிறேன். நம் உறவு அறுந்துதான் போய்விட்டது,'' என்றான். அந்தக் குரலில் காலங் கடந்து விட்டது என்ற உணர்வின் ஆற்றாமையை என்னால் புரிந்து கொள்ள முடிந்தது. அந்தச் சொற்களில் ஓர் உண்மையான தந்தை கோரமாகக் கிழித்தெறி

படிப்பகம்

www.padippakam.com



யப் பட்டிருந்தால் எத்தனை கொடுமையாயிருந்திருக்கும்!

"ஆல்ரைட். போகட்டும், மாலா. உன் மேல் எனக்குக் கொஞ்சங் கூட வருத்தமில்லை. நான் உன்னை வாழ்த்துகிறேன். ஆனால் நீ எப்பொழுது வீட்டைவிட்டு வெளிவந்து விட்டாயோ, அப்பொழுதே சில விஷயங்களை நினைத்துப்பார்த்திருக்க வேண்டும். உன் காதலனுக்கு இழுக்கு நேரும்படி புறப்பட்டிருக்கிறாயே, தெரியவில்லையா?"

மீண்டும் அவள் தலையை உயர்த்திப் பார்த்தாள்.

"நீ அணிந்துள்ள நகைகளெல்லாம் நான் போட்டவையல்லவா? நானே உனக்கு வேண்டாத போது என் நகைகள் உனக்கு எதற்கு?"

"மாலா, எல்லாவற்றையும் கழற்றிக் கொடு," என்றான் அந்த இளைஞன். மாலா பரபரவென்று கழற்றினாள். எல்லாவற்றையும் கழற்றிக் கொண்டே வந்தவள் கழுத்தில் கை வைத்ததும் தயங்கினாள்.

"அந்த மாங்கல்யமும் கூடத்தான், மாலா. பத்தாயிரம் ரூபாய் செலவில் பந்தல் போட்டு, ஊரைக் கூட்டி, விருந்து நடத்தி, உன் கழுத்தில் நான் கட்டிய மாங்கல்யம்," என்றான் அந்த எம். ஏ.

"கழற்று மாலா," என்றான் இளைஞன். அவள் செயலற்று நின்றாள். இளைஞன் சட்டென்று மாங்கல்யத்தை அறுத்துப் போட்டான்.

இப்படியாக ஓர் உறவு துண்டிக்கப்பட்டது.

கைகளில் கனத்த நகைகளை அவள் நீட்டினாள். அந்த எம். ஏ. அவற்றை வாங்கித் தன் மோட்டார் சைக்கிளின் பின் புறத்தில் தொங்கிய பையில் போட்டுக் கொண்டு "நீ கட்டியிருக்கிறாயே புடவை. அதுவும் என்னுடையதுதான்," என்றான்.

"பலே கில்லாடிடா," என்று ரிக்ஷாக்காரன் திருவாய் மலர்ந்தான்.

இளைஞன் சட்டென்று ரிக்ஷாவில் இருந்த தன் சூட்கேஸைத் திறந்து ஒரு வேட்டியை எடுத்து அவளிடம் கொடுத்து, "இதைக் கட்டிக் கொண்டு அதை விட்டெறி, மாலா" என்றான். அவளும் அவ்வாறே செய்தாள்.

"இன்னும் என்ன பாக்கி?" என்று ஆத்திரமும் குத்தலுமாகக் கேட்டான் இளைஞன்.

மாஜி கணவன் மெல்லச் சிரித்தவனாய், "பாக்கி முழுவதையும் நான் வசூலிப்பதானால் உன் காதலி நடுத்தெருவில் நிர்வாணமாய் நிற்க வேண்டியிருக்கும், ப்ரதர். நான் தான் அவள் கணவன் இல்லை என்று முடிவாகிவிட்டதே? நான் அவளைக் கேட்க மாட்டேன். மாலா மிகவும் நல்லவள். துரதிர்ஷ்ட வசமாக நீ அவளுடைய இரண்டாவது காதலனாகிவிட்டாய். அவளுடைய மனிதர்கள் என்று சொல்லிக் கொள்ள இந்த உலகத்தில் யாரும் இல்லை. நீ அவளை கைவிட்டு விடாதே. நான் உங்களை வாழ்த்துகிறேன். போய் வாருங்கள். குட் பை," என்று சொல்லிவிட்டு, மறு நிமிஷம் தன் மோட்டார் சைக்கிளை எடுத்துக் கொண்டு கிளம்பி விட்டான். ஒரு சராசரி மனிதனிலிருந்து அந்த எம். ஏ. எவ்வ

படிப்பகம்

www.padippakam.com



ளவு மாறுபட்டு நிற்கிறான் என்று அதிசயித்தேன்.

ரிக்ஷாக்காரன் எழுந்து கொண்டான்.

"புறப்படு, மாலா," என்றான் இளைஞன். அந்தச் சொல் அவள் இன்னும் பாதையில்தான் நின்று கொண்டிருக்கிறாள் என்பதை உணர்த்தியிருக்க வேண்டும். சற்று முன் கனவைப் போல நடந்து முடிந்தவை அவளை உலுக்கியிருக்க வேண்டும். திடீரென்று அவள் விக்கி விக்கி அழுதுவிட்டாள். இளைஞன் பதறிப் போனான்.

"மாலா! இது என்ன? ஏன் இப்படி அழுகிறாய்? என் மேல் உனக்கு நம்பிக்கையில்லையா?" என்றான்.

"நம்பித்தானே புறப்பட்டு விட்டேன். புறப்படுங்க," என்றாள்.

"ரிக்ஷா!" என்று அழைத்தான் இளைஞன்.

"இதோ வந்திட்டேன் சார். ஏறுங்க, பீச் டேசனுக்குத்தாங்களே? அதப் பாருங்க. இந்த ரோடு எம்மாம் பெரிசா இருக்குது? பகல்லே பாத்துப் போகலேன்னா அவுட்டுதான். ஆனா இப்போ ராத்திரி. ரோடு வெறிச்சோன்னு கிடக்குது. நாமா ஜோரா தெம்மாங்கு பாடிக்கிட்டே போகலாம். ஒன்னும் ஆகமாட்டோம். நான் இது மாதிரி பல கேசைப் பார்த்திருக்கேன். எனக்கே இதிலே அனுபவம் உண்டு, சார். மனுசன் ஆசைப்படவேண்டியதுதான். ஆனா மோசம் பண்ணாமே வச்சுப் பாவிக்கணும். என்ன சார் நான் சொல்றது? உங்களை எனக்கு ரொம்பப் பிடிச்சுப் போச்சு. டேசன் வந்துட்டோம், இறங்குங்க. பத்திரமா போங்க. நீங்க ஒன்னும் பர்சைத் தொறக்க வேணாம். அதான் சொல்லிட்டேனே. உங்களை எனக்குப் பிடிச்சுப் போச்சு. சவாரி துட்டை நான் வாங்கக் கூடாது. உங்களுக்கு உதவும். போயிட்டு வாங்க. பரவால்லே சார். கிளம்புங்க."

ரிக்ஷாக்காரன் அவர்களை இறக்கிவிட்டுப் போய் விட்டான். ரிக்ஷாவின் பின்னாலேயே வந்து கொண்டிருந்த நான் மிக நெருங்கி வந்து விளக்கு வெளிச்சத்தில் அவர்களை நன்றாகப் பார்த்தேன். அவள் மிகச் சிறந்த அழகியாக இருந்தாள். எட்டு முழ வேட்டியே அவள் உடம்பை இயல்பாக மறைத்திருந்தது. கனலைப் போல் ஒளிரும் அவள் அழகில் பட்டுப் புடவையும் தங்க நகைகளும் தூசுகளைப் போலத்தான் மங்கிப் போகும். அத்தனை அழகாய், அத்தனை நிறைவாய் விளங்கினாள். ஒரு பூவையோ ஒரு தளிரையோ அவள் உறுப்புகளுக்கு உவமையாகக் கூறத் தோன்றவில்லை. ஏதோ ஒரு மங்கலம் மணமாகவும், சுடராகவும் அவளிடத்தில் பரவியிருப்பதைப் போலப் பட்டது. கணவனைவிட்டு ஓடி வந்தவள் என்று எண்ணவே முடியவில்லை. இன்னும் தன் உண்மையான கணவனுக்காக மௌனமாகக் காத்திருப்பவளைப் போலவே தோன்றினாள். அவளுக்குத் துணையாக நின்ற இளைஞனும் நன்றாகவே இருந்தான். ஆனால், பார்த்த மாத்திரத்திலேயே மிகச் சாதாரணமானவன் என்றே எடை போடத் தோன்றியது. அவர்கள் இரயில் ஏறிக்கொண்டு போய் விட்டனர். ●

www.padippakam.com

# செந்தமிழ் நாடெனும் போதினிலே...

'ஏன் பிறந்தேன் இத்துயர் நாட்டிலே' —பாரதி

**புவியரசு**

கல்தோன்றி முள்தோன்றிய காலத்தே
முள் தைத்து முரிந்து செப்டிக்காகி
கால் வாங்கி
கட்டைபொம்மன் கால்சேர்த்து
வாலோடு முன்தோன்றிய
(பின்னும் தோன்றிய)
மூத்தகுடி
கல்லக்குடி
கள்ளுக்குடி
தூத்துக்குடி
ஊத்திக்குடி
ஆவிநன்குடி
தமிழ்க்குடி!

மிதமிஞ்சிய தமிழ்க் குடியால்
அஜீர்ணமாகிய அகத்தியன்
ஆஸ்பத்திரியில்
ரெண்டு பாட்டல் பிராந்தி சலைன்
(ஒருபாட்டல் விஸ்கி டாக்டருக்கு)
கொடுத்துக் கெடுத்தகாலை

தொல்காப்பியர் முதலாய பன்னிருவர்
மெஷின்கன்களுடன் ஆசானைக்கடத்தி
கபிலமலை வழியே மருத மலை யடைய
சின்னப்ப தேவரென்ற சோமு பாகவதர்
'மருதமலை மாமுனியே' என அலற
முருகன் வேலெடுக்க ஓடி வர
பன்னிருவர் தம் ஆசானுடன்
சிவமலை வழியே சினிமலை ஏறி
குஷ்பூ கௌதமி யாறுகள் கடந்து
குற்றாலத்துக் குளிர்ப்பிரதேசம் அடைந்து
தளப்பிரதேசம் அமைத்தனர் என்க.

இப்பன்னிரு கெரில்லாக்களும்
('கொரில்லா' எனவும் பாடம்)

படிப்பகம்

www.padippakam.com



பாலஸ்தீனப் பன்னிருவர்பால்
பயிற்சி பெற்றவரென
பாண்டிய வேளாள சங்கிர
சரித்திராசான் சாலமி எழுதிய
ஏட்டுக் குறிப்பின் நோட்டுகள் காண்க.

இவரால் படைக்கலப் பயிற்சி பெற்ற
பைந்தமிழ் மறவர்
ஐநூறு மெட்ரிக் டன் கவிதைகளை
இறக்குமதி செய்து மூளை வற்றி
களைப்புற்றுக் கிடந்தனர்...

—அவ்வேளை...

கபாடபுரத்துக் கதவம் திறந்து
குயிலாலுவத்துக் குன்றேறி மாண்ட
குரைகாற் சோழனின் கால்வழிப் பேரனும்
சேரன் செம்பட்டையனின்
கைவழி மருகனுமாய
பாரதிராஜாவும்
அவன் தம்பி இளையராஜாவும்
அவன் தம்பி பாக்யராஜாவும்
அவன் தம்பி சத்யராஜாவும்
அவன் தம்பி பாண்டேராஜாவும்
அவன் தம்பி கஸ்தூரிராஜாவும்
அவன் தம்பி சிவாஜிராஜாவும்
நாவலந்தீவை ஆண்டு வந்தனர்...

நாவலந்தீவில்...
(நாவல் பழஏற்றுமதியாலும்
நாவல் கதை இறக்குமதியாலும்
இப்பெயர் பெற்றதென்பர்)

நாவல் கனிரசக் கடை நடத்திய
குட்டி பூர்ஷுவா குமர வேளிடம்
ஔவைப் பிராட்டி பழம் கேட்டுத்
தடியுடன் சென்று மிரட்ட
குமரன் பழமுதிர்க்க...
அவ்விடம் அன்றுதொட்டுப்
பழமுதிர் சோலையெனப்
பெயர் பெறலாயிற்று!

★

பரசுராமன்
ஆயிரம் தலை வாரிய

படிப்பகம்

www.padippakam.com



அபூர்வ சிந்தாமணியை
அர்த்த ராத்திரியில்
பாணிக்கிரகணம் செய்துகொண்ட
அன்றிரவு . . .
(அன்றிரவு சந்திரகிரகணம்!)

ஆயிரத்தோர்ராவது மணிமுடியைத்
தர்ம பத்தினி வேண்ட
நெடுமுடி வேணுவின்
மணிமுடி தந்தான் பரசுராமன்.

அன்று முதல்—
மணிமுடி தரிக்கும் மரபு
மாய்ந்தொழிந்தது!
முடிக்குப் பதிலாய்
கறுப்புக் கண்ணாடி அணியலாயினர்!

ராமச்சந்திர பட்டாபிஷேகம்
நடந்தபோது
அங்கதன் புலிவால் ஏந்த
ஆரெம்வீ தொப்பி கவிழ்த்தனன்!

அதுமுதல்—
தொப்பியே முதலென்பாரும்
கண்ணாடி முதலென்பாரும்
தம்முள் வாதிட்டு வழக்கிடலாயினர் . . .
நியாயவாதம்
நீதிபோதம்
பக்கபாதம்
கீல்வாதம்
முடிந்த பின்னே
தொப்பி கண்டார் தொப்பியே கண்டார்!
(கறுப்புக் கண்ணாடி அதன்கீழ் கண்டார்)

★

மிதிலைச் செல்வி
சனகியின் தங்கை
சீறி வருகிற
செந்தமிழ் வர்லாறு
இருபதாம் நூற்றாண்டின்
இறுதியில் உள்ள
இருண்ட கிடங்குகளில்
இருப்பின் காண்க:

படிப்பகம்

www.padippakam.com



## நூல் நலம்

## பறளியாற்று மாந்தர்

மா. அரங்கநாதன்

நவீனம். பக்கங்கள்: 208

விலை ரூ. 22

வேள் பதிப்பகம், 110, கல்லூரிச் சாலை, பழவந்தாங்கல், சென்னை-600114.

நவீனம் ஒரு சமூக வரலாறு படித்த திருப்தியை ஏற்படுத்துகிறது. வெறும் கதையை மட்டும் சொல்லாமல் அந்தந்தக் காலகட்டங்களில் நேர்ந்த சமூக அரசியல் நிகழ்ச்சிகளும் சமூக மாறுதல்களும் கதையுடன் இயைந்து சொல்லப்பட்டிருக்கிறது.

எந்தக் காலகட்டமும் ஒரு தேக்கம் அல்ல. ஒரு பெயர்ச்சி நிலைதான். பழமையும் புதுமையும் எந்த ஒரு காலகட்டத்திலும் சேர்ந்தே இருந்து வந்திருக்கின்றன. இது நவீனத்தில் பிரதிபலிக்கப்பட்டிருக்கிறது.

வரலாறு, வட்டார வழக்குகள், உணவு முறைகள், புராணம், நம்பிக்கைகள், இனம், சமயம், மத மாற்றம், ஆட்சிகளினால் விளைந்த பாதிப்புகள், மொழி மீதான பாதிப்புகள், சிறுவர் விளையாட்டுகள், சிறுவர் பாடல்கள், பாடசாலை, விவசாயம், தொழில்கள், கிராமிய தெய்வங்கள், திருவிழாக்கள்- இப்படியாக நவீனம் விரிவடைந்துகொண்டே செல்கிறது.

அனைத்துப் பாத்திரப் படைப்புகளும் திடகாத்திரமானவை. எந்தக் கேள்வியினாலும் உடைந்துவிடுபவை அல்ல. ஒவ்வொரு பாத்திரமும் தன்னளவில் முழுமைபெற்றுச் சிறக்கிறது. ஒவ்வொரு பாத்திரமும் ஒரு சமூக குறியீடாகச் சித்தரிக்கப்பட்டிருக்கிறது. நாகம்மாள் முதல் அப்பாதுரை ஊடாக ரவி நல்லசிவம் வரை அனைவரும் சமூகக் குறியீடுகள்தாம்.

இதில் கையாளப்பட்டிருக்கும் உரைநடை தமிழுக்கு மிகவும் இயல்பானதாக இருக்கிறது. பேனாவை காகிதத்தில் வைத்தால் அது தானாக எழுதும் அனாயாசம் (Spontaneity) நவீனம் முழுக்கக் காணக் கிடைக்கிறது. எதுவும் வலிந்து புகுத்தப்படவில்லை. கதையை விறுவிறுப்படைய வைக்கவேண்டும் என்ற நோக்கத்துடன் செய்யப்படும் செருகல்கள் இல்லை. மிகுந்த அக்கறையுடன், ஆழ்ந்த மன ஈடுபாட்டுடன் எழுதப்பட்டிருக்கிறது இப்படைப்பு.

மேலோட்டமாகப் பார்க்கும் போது, இதில் கையாளப்பட்டுள்ள தொனி மிகவும் தணிவான நிலையில் இருப்பதாகத் தோன்றினாலும் அடியோட்டத்தில் ஆழ்ந்த மன எழுச்சி இருப்பதை உணர முடிகிறது. இந்தத் தொனியைப்பற்றி ஒன்று நிச்சயம் சொல்ல வேண்டும். அது எனக்கு மட்டும் நிகழ்ந்திருக்கிறதா, இல்லை அநேகருக்கா என்பது தெரியாத நிலையில் கூட அதுபற்

படிப்பகம்

www.padippakam.com



றிக் கூற எனக்குள் ஒரு கடப்பாடு ஏற்பட்டிருக்கிறது. Pearl S. Buck படிக்கும்போது என்னுள் ஓர் உணர்வு எப்பொழுதும் ஏற்பட்டதுண்டு. தெளிந்த நீரோட்டம் என்று அதை நான் உணர்ந்து கொண்டதுண்டு. அதே உணர்வுதான் இந்நவீனத்தின் தொனியிலும் எனக்கு அனுபவிக்கக் கிடைக்கிறது. இதை என்னால் சரிவர விரிவாக எழுத முடியவில்லை. உள்ளுணர்வுகளை வார்த்தைகளில் வடிப்பது அவ்வளவு எளிதல்ல. குறைந்தது எனக்கு எளிதாகப் படவில்லை.

ஆங்காங்கே நகைச்சுவையும் அங்கதச் சுவையும் காணக் கிடைக்கின்றன. இயல்பான இடங்களில் பொருத்தமாக இச்சுவை கொணரப்பட்டிருக்கிறது. ஆனாலும் இச்சுவைகளின் அடியில் மண்டிக் கிடப்பது ஆழ்ந்த சோகம்.

ஒருவித நிலை கொள்ளாமையும் தான் யார் என்று புரிந்துகொள்ள முடியாத இயலாமையும் பரிதவிப்பும் இந்நவீனத்தில் கர்ண்முடிகிறது. வாழ்க்கை பூராவும் முளைகள் Pegs). பல முளைகளில் ஆளுமையின் பகுதிகள் சிக்கிக் கொள்கின்றன. தான் யார் என்று புரிந்து கொள்ளும் சிக்கல் எல்லோருடையதும்தான். ஆனால் இது பிரத்யேகமாகச் சொல்லப்படுவது இந்த நவீனத்தில்தான் என்று நினைக்கத் தோன்றுகிறது.

பெண்களின் பாத்திரப் படைப்புகள் இயல்பாக அமைந்துள்ளன, மீனாட்சி உட்பட. எந்தவொரு அதீத முக்கியத்துவமும் இவர்கள் மீது திணிக்கப் படவில்லை. யதார்த்தத்துக்கு முரணாக எதுவும் இல்லை இதில். மனித மனங்களுள் ஏற்படும் இயல்பான உணர்ச்சிகள், பிணைப்புகள் எல்லாம் சாதாரண தொனியில் அழுத்தம் கொடுத்தல் போன்ற உத்திகள் கையாளப்படாமல் செயற்கைத்தன்மை இல்லாமல் சொல்லப்பட்டிருக்கின்றன.

இந்தப் புத்தகத்திலிருந்து மேற்கோள்கள் காட்டி விரிவான மதிப்புரையை எழுதுவது வாசகனுள் ஒரு முன் – மன நிலையை ஏற்படுத்தி விடுமாகையால் அவ்வாறு செய்வது தவிர்க்கப்பட்டிருக்கிறது. வாசகனுள் ஓர் எதிர்பார்ப்பையும் வாசகச் சுவை குன்றுதலையும் மதிப்புரை ஏற்படுத்தக்கூடாது.

வாழ்க்கை மீதான பார்வைகள் பொருத்தமான இடங்களில் கொடுக்கப்பட்டிருக்கின்றன. முன் பத்தியில் சொல்லப்பட்ட காரணத்திற்காக மேற்கோள்கள் தவிர்க்கப்பட்டிருக்கின்றன.

*கலாச்சார மானுடவியல் என்ற பகுப்பின் விவரணை 'பழங்குடியினரின்' என்ற வார்த்தையை உள்ளடக்கியிருக்கிறது. ஆகையால்தான் இப்படைப்பை ஒரு கலாச்சார மானுடவியல் நூல் என்று சொல்வதில் எனக்குத்தடை ஏற்பட்டுள்ளது.*

—கோயிகிருஷ்ணன்

படிப்பகம்

www.padippakam.com

## துறவி

### வாழ்க்கை நிஜம்

'வாழ்க்கை பொய்' என்று
வருந்தச் சொல்பவனை
சந்தேகி. உன்னில் சந்தோஷம் பெருகும்.
சுயநலவாதியே சொல்லுவான் அப்படி.
சூரியன் நிஜம்; நிலவு நிஜம்;
காற்று நிஜம்; கடல் நிஜம்;
வாழ்க்கை நிஜம் என
வரையறுப்பவை அவை.
உள்ளங்கையில் ஊற்றி வைத்த தேன்போல்
வாழ்க்கை உனக்கு வாய்த்திருக்கிறது.
பொய்தானென்றால் பூமியோர் சூனியம்.
நாளை நேரும் மரணத்திற்காக
இன்றே சவப்பெட்டி ஏறுவதில்லை.
பழமரக் கன்றைக் கை நடும்போது
பொய்எனப் புகல்பவன் புத்தியைப் பரிகசி.
பட்டு தரித்தவன் நிர்வாணம் போற்றலும்
சிரம் பொய் என்பவன் மகுடம் தரித்தலும்
விரல் பொய் என்றே மோதிரம் காட்டலும்
பஞ்ச பூதங்களைப் பரிகசிப்பதல்லவா?
கடிகாரம் நிஜப்படுத்தும் கணங்கள்,
ஒளியை நிஜப்படுத்தும் எரியும் திரி,
கரிப்பை நிஜப்படுத்தும் கண்ணீர், யாவும்
வாழ்வை நிஜப்படுத்தும்
அன்றாட தரிசனம்.
பாய் தேடும்போது பாடை நினைவகற்று.
சொட்டுச் சொட்டாய் உன்னை
நம்பிக்கையில் நனை.
வெளிச்சக் கதிரொடு தோழமை வளர்.
சிரிப்பைப் பறிக்கும் சோகத்தை முறி.
வாழ்க்கை உனக்கு வரப்பிரசாதம்.
எச்சிற் பருக்கையாய் இறைத்துவிடாதே.

படிப்பகம்

www.padippakam.com

# அவனாயிருக்க

## குணகராஜன்

கேசவன் தன்னைப்பற்றி நினைத்துக்கொண்டான். போக வேண்டும் என்கிற எண்ணமே இன்றி, பாலத்தைக் கடந்து போன லாரியின் சத்தத்திற்குத் திரும்பிப் பார்த்தான். பார்வையின் மறைவிற்குப் பின்னாலும் சத்தம் நீண்ட நேரம் கேட்டது. இரவின் மவ்னத்தை அந்தப் பெருத்த சத்தம் உடைத்து அமைதி கலைத்து ஓய்ந்தது. சில நிமிடங்களுக்குப் பின்னால் முன்பு இல்லாத அமைதி அவ்விடத்தில் நிலவியது.

கொஞ்ச நாட்களுக்குள் அவனை யாரும் புரிந்துகொள்ள முடியாதுதான்.

வந்த புதிதில் இந்த ஆறு பேரிரைச்சலோடு ஓடிக் கொண்டிருந்தது. சமீப நாட்களாகத்தான் மழையின்றி ஆறு வற்றிப் போய் சத்தம் இல்லாத வறண்ட நிலமாயிற்று. ஆறு என்பது தொலைந்து போன நினைவு மாதிரி ஆகிவிட்டது.

அப்பாவைப் போல - அம்மாவைப் போல - தாத்தாவைப் போல—

இந்த முறை அவன் யாரிடமும் பெரிதாகச் சொல்லிக் கொள்ளவில்லை. விடை பெறுதல் மனசில் கனத்தையும் சித்ரவதையையும் உண்டாக்கியது. மையமின்றி வட்டமிட்டுச் சுற்றித் திரிகிற பறவை மாதிரியான தாக்குதல் அவனிடம்.

"உன்னைப் புரிஞ்சிக்கவே முடியலே..." ரவிசங்கரனால் அடிக்கடி சொல்லப்படும் வரி இது. அது மாதிரித்தான், விடை பெறுகிற நீண்ட பேச்சிற்கு விருப்பமின்றி யாரிடமும் எதுவும் சொல்லிக் கொள்ளாமல் கிளம்பி விட்டான்.

சில நேரங்களில் அது பிடித்திருந்தது. ஏதாவது ஒன்றில் பிடிவாதமாய் இருக்கவே விரும்பினான்.

விருப்பமிருந்தால் புரிந்து கொள்ளட்டும். புரிந்து கொள்ள வேண்டுமென்கிற நிதான நிலையில் யாரும் இருப்பதில்லை.

ரவிசங்கரனுக்கு தாமரைச் செல்வியைத் தெரியும். அவளை வர்ணிக்கும்படியான கதைகள் எழுதத் தெரியும். கேசவனுக்கு தன்னையும் மீறிய சிரிப்பை வரவழைக்கும் மிகையான அலங்காரம் கொண்ட கவிதைகள். கவிதை நிஜமில்லை. தாமரைச் செல்வியின் அழகும் நிஜமில்லை. ரவிசங்கரன் கூட நிஜமில்லை.

நிலாவையும் நட்சத்திரங்களையும் கூட அவன் சும்மா விடுவதில்லை. ரவிசங்கரன் கவிதை எழுதிப் படிக்கிற பாவனையில் செயற்கையான உணர்ச்சிகளுடைய உச்சரிப்பே மிதக்கும். அப்படி ரவிசங்கரன் என்னதான் புரிந்து கொள்ளத் தவிக்கிறான்? அவன் நோக்கம் தாமரைச் செல்வியா? கவிதையா? தாமரைச் செல்வியின் நோக்கம் என்ன என்பது இதுவரைக்கும் யாருக்கும் தெரியவில்லை. தாமரைச் செல்வியும் கவிதையும் ரவிசங்கரனுக்கு வலிய வந்து தொற்றிக் கொண்ட வியாதி மாதிரி.

படிப்பகம்

www.padippakam.com



அப்பாவிடமிருந்து வருகிற கடிதத்தைக்கூட கேசவன் ஆழ்ந்து படிப்பதில்லை. அம்மா சொன்னதாக அப்பாவால் எழுதப்படும் கடிதம் வேடிக்கையாக இருக்கும். உண்மையில் அம்மா சொல்லாத அறிவுரைகள் நிறைய இருக்கும். அப்பா அவன் மேல் அக்கறை இல்லாதவர் போல காட்டிக் கொள்ள பிரியப்படுகிறார்.

மூன்று கடிதங்கள் வந்த பின்னால்தான் பதில் எழுதுவான்.

கேசவனுடன் அறையில் தங்கி இருப்பவர்கள் வாரத்திற்கு இரண்டு மூன்று எழுதுவார்கள். ரவிசங்கரன் கடிதத்தின் ஏதாவதொரு மூலையில் தாமரையின் படத்தை வரைந்து வைப்பான். தாமரைச் செல்வியின் நினைவுகளை மறக்காமல் இருக்க தாமரைப் பூவின் படம் தேவைப்பட்டது. தாமரைப் பூவின் படம் வரைகையில் அவன் முகத்தில் பரவசம் தோன்றி மறையும். அவன் பேசுகிற தொனியில் வார்த்தைகள் நீண்டு நீண்டு ஒலிக்கும். ரொம்ப உணர்ச்சி வசப்பட்டுப் போவான். அநேகமாய் அவன் வார்த்தைகள் எப்போது திருமென்று பொறுமை இழக்க வைக்கும்.

கேசவனின் உணர்ச்சியற்ற முகத்தை ஒரு முறை பார்த்த பின்னால் ரவிசங்கரன் முகம் மாறும்.

"நீ எப்ப முடிப்பெ...?" திடீரென ரவிசங்கரனைக் கேட்க, அவன் முகம் சுருங்கிப் போகும். பார்வை எரிச்சல் நிறைந்து வெறிக்கும். அவன் கோபமாய் எழுந்து போகிற போது எவ்வித பாதிப்புமின்றி கேசவன் சிரிப்பான்.

கேசவன் அறைக்குத் திரும்ப நினைத்தான்.

நேரம் போயிற்று. எழுந்து நடந்தபோது இவன் உருவ நிழலின் அசைவைக் கண்டு ஒரு நாய் குரைத்தது. பழகிப் போன திசையில் நடந்தான்.

அறையின் கதவைத் தள்ளியதும் சத்தமில்லாமல் திறந்து கொண்டது. ஜீரோ வாட்ஸ் பல்பு மங்கலான வெளிச்சத்தில் எரிந்து கொண்டிருந்தது. சாமிநாதன் ஒரு மூலையில் படுத்துக்கிடந்தான் அவன் தலைக்கு மேலே, பாதி மார்பைக் காட்டிய ஒரு நடிகை இருந்தாள். அந்தப் பெரிய படத்தை சாமிநாதன்தான் ஒட்டினான். தினமும் காலையில் 'அது' முகத்தில்தான் விழிப்பான். முத்தம் கூட கொடுப்பான்.

சிவசங்கரன் மற்றொரு போட்டியாள். அவன் ஒரு நடிகனின் தீவிர ரசிகன். சுவர் முழுக்க ப்ளோ அப்களை ஒட்டுவான். தன்னை தன்னுடைய அபிமானத்திற்குரிய கதாநாயகனைப் போன்ற பாவனையில், பேச்சில், நடையில், உடையில், செயலில் பிரதிபலித்தான்.

அந்த நடிகனின் தோற்றத்திற்குத் தன்னைத் தயார்ப்படுத்தி வருகிறான். ரிலீஸ் அன்று முதல் காட்சியைப் பார்த்துவிட்டு வருகிறவன், ஒரு சாதனையாளனைப் போலப் பெருமை கொள்வான். படத்தின் கதையைச் சொல்கிற அவனிடம் சொற்கள் துடிக்கும். பரவசத்தில் கை நடுங்கும். அவனே நடுங்குவான்.

படிப்பகம்

www.padippakam.com



இருதயராஜின் டேப் ரிக்கார்டர் ஒரு பெரிய தொல்லை. ஒரு நாளின் முக்கால் பங்கு அறையில் அதுதான் ஆட்சி நடத்துகிறது.

ரவிசங்கரன், சிவசங்கரன், சாமிநாதன் எல்லாரும் அவனுடைய ஆடம்பரத்திற்காக மயங்கித் திரிகிறார்கள். இருதயராஜ் தன்னை ஒரு பாடகன் போலப் பாவித்து நிறைய பாடுவான். அதுதான் கொடுமை. கேசவனின் காதிற்குள் ரயில் ஓடுகிற மாதிரி இருக்கும்.

பாட்டிற்குத் தாளம் போடுவதும் டான்ஸ் ஆடுவதுமாய் நால்வரும் அறைக்குள் கும்மாளம் அடிப்பார்கள். சிவசங்கரன் விசேஷமாய்த் தன்னுடைய கதாநாயகனைப்போல நடித்து, பேசி, ஆடுவான்.

இடி இடிக்கிற மாதிரி இருக்கும். ஓயாது அறைக்குள் மழை பெய்கிற மாதிரியான இரைச்சல் இருந்து கொண்டு இருக்கும். தகரத்தை அடித்து நொறுக்குகிற மாதிரி இருக்கும்.

கேசவன் படுக்கையை விரித்தான்.

தூக்கம் வரவில்லை என்பதால் உட்கார்ந்துகொண்டான்.

மணி பன்னிரெண்டு. எல்லாம் அடங்கிப் போன மாதிரி இருந்தது. மனசு வெறுமையாக இருந்தது. அதில் பூரண அமைதி கிடைத்தது.

அவனால் படிக்கப்படும் புத்தகங்கள் யார் கையும் படாமல் தனியே கிடந்தன. ஆசிரியர் வைகுண்டராமன் இந்த மாதிரியான புத்தகங்களுக்குக் 'கைபடாத ரோஜா' என்று பெயர் வைத்திருக்கிறார்.

இவனால் படிக்கப்படுகிற புத்தகங்களுக்கு உயர்ந்த மதிப்பு ஒரு குறிப்பிட்ட வட்டத்திற்குள் உண்டு. இங்கே இவனால் படிக்கப்படும் புத்தகத்திற்குக் கிண்டலும் கேலியும் தான் நண்பர்களிடம் உண்டு.

கேசவனுக்குள் கவலை பெரிதாக வளர்ந்தது.

இது எதற்கு என்று தெரியவில்லை.

தான் தனித்தும் அமைதியுற்றதும் போன்ற பிரமிப்பு எழுந்தது.

எங்கோ கூச்சலிட்டு சண்டை போட்ட நாய்களின் இரைச்சல் மெல்ல மெல்ல அடங்கி ஓய்ந்து போன மாதிரி இருந்தது.

அந்த அமைதியை உறங்கிக் கழிக்க விரும்பவில்லை.

யோசனைகளோடு உட்கார்ந்து இருந்தான். ★

---

## முக்கிய அறிவிப்பு

அச்சகச் சீரமைப்புப் பணி காரணமாக அடுத்த இதழ் அக்டோபர் இதழுடன் சேர்ந்து அக்டோபர் முதல் வாரத்தில் அதிகப் பக்கங்களுடன் வெளிவரும். கருத்துகளை முன்னெடுத்துச் செல்லும்படியான வாசகர் கடிதங்களைத் தொடர்ந்து வெளியிட எண்ணம். எழுத வேண்டுகிறோம்.

**-ஆசிரியர்**

படிப்பகம்

www.padippakam.com

நெருக்க பொறுக்கிகளே!

# எத்தனை காலம் புலம்புவது?

ஒரு வழியாகக் காவிரி சிக்கல் எவ்வித வில்லங்கத்திலும் சிக்கிக்கொள்ளாமல் அதன் தோற்றுவாயிலேயே நிலை நிறுத்தப்பட்டுவிட்டது.

தமிழக முதல்வரின் முன்னறிவிப்பில்லாத திடீர் உண்ணாவிரதம்– தமிழன் என்னும் முகம் மட்டுமே தரித்த ஒவ்வொருத்தனுக்கும் அதிர்ச்சியான சிலிர்ப்பானது, 'காவிரி நீர்ப் பங்கீட்டுச் சிக்கல் தீர்ந்துவிடுமா? தீர்ந்துவிடாதா?' என்று. காரணம் முதல்வரின் உயிருக்கு அப்படியொரு விலை.

ஆயிற்று. நான்காம் நாள் உண்ணாவிரதம் முடிந்தது. மிஞ்சியது முதல்வருடைய கட்சிக் காரர்களின் வெற்றி விழாதான்.

அரசியல் வரலாற்றில் பூஜ்யத்திற்கு வெற்றி விழா கண்டது இப்போதாகத்தான் இருக்கும்.

வெற்றுக் கூச்சலையே பருகிப் பிழைத்திடும் அரசியல்வாதிக்கு இந்தக் குரூரமும் ஒரு விளையாட்டுதான். ஆனால், பொன்னியாற்றின் நீருக்கு மறுகும் தமிழனுக்கு இது வரப்போகும் உற்பாதத்தின் முன்னறிவிப்பல்லவா? வெகு சரியாகத்தான் சொல்லியிருக்கிறார் டாக்டர் தி.கமலி (பக்கம்-9).

திரு ஆர்.வெங்கட்ராமன் முன்னாள் குடியரசுத் தலைவர். காவிரி நடுவர் மன்றத் தீர்ப்பு வந்தபோது பதவியிலிருந்தவர். உண்ணாவிரதமிருந்த முதல்வரைப் பார்த்துப் பேசியிருக்கிறார். விடை பெறும்போது அரசு அதிகாரிகளிடம் "எனக்கு இந்த நீர்ப் பிரச்சினை பற்றி முழு விவரங்களையும் அனுப்பி வையுங்கள். நானும் டெல்லியில் பேசுகிறேன்," என்று சொல்லிப் போனாராம். அதிகாரிகள் ஒன்றும் புரியாமல் 'முழிக்க' கேட்டுக்கொண்டிருந்த நிருபர்கள், "எதற்கு? கட்டுரை எழுதுவதற்கா?" என்று காமெண்ட் அடித்தார்களாம். ஆனந்தவிகடன் (25-7-93) சொல்கிறது.

இவர் குடியரசுத் தலைவராய் இருந்த போது வெகு பிரமாதமாக உரையாற்றுவார். கீதையெல்

படிப்பகம்

www.padippakam.com



வாம் மேற்கோள் காட்டுவார். நம் பாரதியைக்கூட காட்டிய துண்டு. இவர் டில்லியில் இருந்தவரை அங்குள்ள காமராசர் சிலைக்கு அவர் பிறந்த நாளில் மறவாமல் மாலை அணிவித்து வந்தார். மிகவும் நன்றியுணர்ச்சியுள்ள மனிதர்.

பாவம், யமுனைக்கருகில் இருந்துகொண்டு, காவிரி பற்றி நினைப்பது தப்பாகப் பட்டிருக்கும் அவருக்கு. நிலம், இனம், மொழி கடந்த, இந்தியா முழுமைக்கும் மெய்யான குடியரசுத் தலைவராக இவர் ஒருத்தர்தான் பதவி வகித்திருப்பார்.

இவருக்கு இதை விடவும் கூடுதலான ஒரு சிறப்புண்டு. கடவுளை மறந்தாலும் காஞ்சி மடத்தை மறவாத பக்தரிவர். இந்திய ஆட்சியாளர்களின் குரு பீடமாகக் காஞ்சி மடத்தை எழுதப்படாத அரசியல் சாசனமாக்கியவர் இவர்தான் எனில் மிகையான பாராட்டே அல்ல. தேர்தல் வலை விரித்து வாக்குகள் சேகரிக்க மட்டுந்தான் இந்தியா இப்போது ஒரு மதச் சார்பற்ற நாடு. மற்றபடி இந்தியன் என்று இங்கேயும் சரி, வேறு எங்கேயும் சரி இல்லை. இருந்திருந்தால் காவிரியானது தீர்வில்லாத சிக்கலாய் நீளுமா?

ஆறுகள், மலைகள், வனங்கள் யாவும் அரசியல் எல்லைகளை மதிக்காத அடங்காப் பிடாரிகள்.

இந்தக் காவிரியைப் பாருங்கள்:

குடகில் தோன்றி, கன்னடம் பேசிக்கொண்டு, கர்நாடகத்திற்குள்ளேயே சுற்றிச் சுற்றி, ஓடியாடி அடங்கியிருக்கலாம். அதை விட்டு, 'நடந்தாய் வாழி, காவேரி!' என்று இளங்கோவைப் புல்லரிக்கச் செய்து, 'சோழ நாடு சோறுடைத்து, எனத் தஞ்சை சேறெல்லாம் சோறாக்கி, கடலில் கலக்கக் காவிரிப் பூம்பட்டினத்தையே நிர்மானித்து அமர்க்களப்படுத்தியிருக்க வேண்டாம். நாமும் இது புனலாய் நடக்கிறதா, இல்லை மணலாய்க் கிடக்கிறதா என்று கவலைப்பட்டிருக்க மாட்டோம்.

தமிழர்கள் எங்கேயும் பிரச்சினையை உண்டாக்கினவர்கள் என்று பெயரெடுத்ததில்லை. ஆனால், தங்கள் உழைப்பினால் இவர்களே பிரச்சினையாக அறுவடையாகிறார்கள் என்பதுதான் பிரச்சினை. உலகம் முழுக்க இதே கதைதான்.

காவிரி சிக்கலில் எல்லா வகை நியாயங்களும் இவர்கள் பக்கம்தான்.

1924 இல் அன்றைய மைசூர் அரசுக்கும் ஆங்கில ஆதிக்கத்திலிருந்த தமிழ்நாட்டுக்கும் உடன்படிக்கை ஏற்பட்டது. அதில் ஒரு துண்டுக் குறிப்பு: ஒப்பந்த அளவுக்கு மேல் நதியில்

படிப்பகம்

www.padippakam.com



கிடைக்கும் மிகையான நீர் வினியோகம் பற்றி 50 ஆண்டுக ளுக்குப் பின்னர் பேசிக்கொள்ளலாம் என்பதாக.

பேசினால் சரி. பேசாவிட்டால்? ஒப்பந்தம் பாட்டுக்கு ஒரு மாற்றமுமில்லாமல் தொடர வேண்டியதுதான். இது ஊர றிந்த நியாயம்; ஐ.நா.வே அங்கீகரித்த நியாயம்.

ஆனால், கர்நாடக அரசு பண்ணியதென்ன?

50 ஆம் ஆண்டு முடிவில், அதாவது 1974 இல் ஒப்பந்தமே காலாவதியாகிவிட்டது என்று தன்னிச்சையாக அறிவித்து விட்டது. "இல்லை" என்று நிலமதிர முழக்கமிட வேண்டிய தமிழ்நாடும், 'நான்சென்ஸ்' என்று நேரு பாணியில் நியாயம் வழங்க வேண்டிய மத்திய அரசும் அப்போது மும்முரமாக அரசியல் சதுரங்கம் ஆடிக்கொண்டிருந்தன. இத்தனைக்கும் கலைஞர்தான் முதல்வர்; இவர் தயவு நாடிய இந்திராதான் பிரதமர். இருவருக்கும் சொந்தத்தில் புகழ்ச் சாகுபடி செய் யும் பிடித்தமான வேலை. அதற்கும் மேலாக, ஒரு தலைமுறை காலத்துக்கும் கூடுதலாகவே நீண்டு வந்த விரதம் முறித்துக் கொண்டு, கலைஞரின் தயவால் 1971 முதலாகவே தமிழ்நாட் டில் கள்ளும் சாராயமும் காவிரி வெள்ளமாய்ப் பெருகிவிட்டது.

ஒப்பந்தம் முடிந்திருக்கக் கூடுமானால், நாடு விடுதலை பெற்ற 1947இலோ, அரசியல் சட்டம் கண்ட 1950இலோ, மொழி வழி மாநிலங்கள் கண்ட 1956இலோ, அதுவும் ஏதே னும் திருத்தம் காரணமாக நிகழ்ந்திருக்க முடியும். அவ்வா றில்லாமல் 1974 வரை நீண்ட பின்னர், திடீரென முடிந்து விட்டது என்பது மானுட நியாயங்களுக்கு அப்பாற் பட்டது,

இதுதான் சிக்கலின் எடுப்பு, தொடுப்பு, முடிப்பு எல்லாம்.

'அதன் பிறகு எவ்வளவு நடந்துவிட்டது! கர்நாடக மக் களின் ஒட்டுமொத்த உணர்ச்சிகளும் ஊடுருவிப் போனதில், வாழ்வா சாவா என்னும்படிக்கு ஆழமாகிவிட்ட சிக்கலை இவ் வளவு எளிமையாகக் காட்டுகிறாயே' என்பார்கள் அரசியல் கில்லாடிகள். என்னவோ கர்நாடகம் மட்டுமே உணர்ச்சி களைக் குத்தகை எடுத்துக் கொண்டது போலவும், தமிழக மக்கள் வெறும் ஜடங்கள் என்பது போலவுமான பார்வையிது. ஜடமோ, இல்லையோ, டில்லி தமிழகத்தை வெகு காலமாக அப்படித்தான் பார்க்கிறது. அதன் ஜடப் பார்வைக்கு நம்பக மான வேர்கள் உண்டு. 'அடைந்தால் திராவிட நாடு, இல் லையேல் சுடுகாடு' என்னும் அசைக்க முடியாத கொள்கையை ஒரு சின்னக் கண் சிவப்பில் தூக்கிக் கடாசிவிட்டு, பின்னர் அவர்களே ஆளவந்தார்களானார்களே, அதில் பிடித்த வேர்.

படிப்பகம்

www.padippakam.com



'புதிய ஒப்பந்தம் போடப்பட வேண்டும். பேசித் தீர்க்கலாம்' என்று சொல்லியே, இந்த 19 ஆண்டுகளில் 25 முறை பேசியாகிவிட்டது. ஒரு உடன்பாடும் எட்டவில்லை. கர்நாடகமோ இன்னும் பேசத்தான் விரும்புகிறது. இப்படிச் சொல்லிக்கொண்டே எந்தவித சட்ட, சாசன, நீதிமன்ற அனுமதியுமின்றி, கர்நாடகத்தில், காவிரியின் குறுக்கே நான்கு புதிய அணைகள் கட்டிவிட்டதோடு, மேலும் புதிய அணைத் திட்டங்களும் புதிய பாசனப்பரப்பும் உருவாக்கியுள்ளது.

'எங்கள் மாநிலத்தில் அணை கட்ட யார் அனுமதியைக் கேட்பது?' என்பது அவர்கள் கேள்வி. 'எல்லா அணைகளும் நிரம்பி, எச்சரிக்கை அளவைத் தாண்டும்போது, அணைகள் உடைந்துவிடாமல் இருக்க- நாங்கள் திறந்துவிட்டோ, வழிந்தோடியோ செல்லும் நீர்தான் மேட்டூர் அணைக்கு' என்பது அவர்கள் வாதம். புதிய உடன்பாடு என்பது இதுபோல ஒன்றாகத்தான் அவர்களுக்கு வேண்டும்.

இந்நிலையில் நடுவர் மன்றம் தன் இடைக்காலத் தீர்ப்பாக ஆண்டுக்கு 205 டி.எம்.சி. நீர் வழங்க உத்தரவிட்டுள்ளது.

நடுவர் மன்றத் தீர்ப்புக்கு மேல் முறையீடு கிடையாது. அதை மீறுவது என்பது அரசியல் சாசனத்தை- நீதிமன்றத்தை- இந்திய ஒருமைப்பாட்டை அவமதிக்கும் குற்றமாகும்.

கர்நாடகம் மீறுகிறது. அதுதான் நியாயம் என்கிறார்கள் கர்நாடக மக்கள் ஒட்டுமொத்தமாக. ஜாதி, மத, இன, பண, அறிவு, படிப்பு, பணி போன்ற எந்தப் பேதமுமில்லாத ஒரே குரலில் ஓங்கிப் பேசுகிறார்கள்.

தப்புதான் என்றாலும், இதில் பாராட்டுக்குரிய ஒரே விஷயம் அவர்கள் ஒற்றைக் குரல்தான்.

தமிழ் நாட்டில்? அவர்கள்தான் அரசியல் குட்டையிலிருந்து கரையேறவே இல்லையே.

நியாயத்தை நிலைநாட்ட வேண்டிய மைய அரசோ, 'இது ஏதோ அன்னிய சமாசாரம். நம் கொள்கை அணி சாராமை அல்லவா?' என்று இன்று வரை வேடிக்கை பார்க்கிறது.

இறையாண்மையுள்ள எத்தனையோ நாடுகள் வழியே ஓடும் நதிகள் பற்றிய தீர்வுகளெல்லாம் உலகம் நெடுகக் காணப்பட்டுள்ளன. ராவி, பியாஸ் பற்றிய ஒப்பந்தம்கூடப் பாகிஸ்தானோடு செய்துகொண்டாயிற்று.

ஆனால், ஒரே நாட்டில் இரு மாநிலங்களுக்கிடையிலான நதி நீர்த் தகராறு தீர்க்கப்பட முடியவில்லை என்றால், நாம் ஒரே நாட்டினர் என்பதுதான் தவறோ!

படிப்பகம்

www.padippakam.com



1956 இல், ஆந்திர மைந்தர் பொட்டி ஸ்ரீராமுலு மொழி வழி மாநிலங்களுக்கு வழி கோலினார். இன்று கர்நாடகம் மொழி வழி நாடுகளுக்கு வடிவம் தரப் போகிறதா?

நியாயம் நிலைப்பட, மத்திய அரசு கர்நாடகத்தை வழிப் படுத்த வேண்டும். முரண்டு பிடித்தால் குடியரசுத் தலைவர் ஆட்சி வந்து நடுவர் மன்றத் தீர்ப்பை நிறைவேற்ற வேண்டும்.

கர்நாடக அரசைக் கலைப்பது பற்றி ஒரு வாதம் வைக்கப் படுகிறது. அதாவது, தேர்தல் மூலம் அரசு அமைக்கும் மக் களாட்சியில் இந்த அரசு போனால், இதை விட மோசமான அரசு அடுத்து வரும். பிரச்சினை தீருமா என்கிறார்கள்.

சரி, அவர்கள் அராஜகத்தை ஒத்துக்கொள்ளலாமா, அதன் பின் விளைவுகளோடு?

'இனி கொள்ளைக்காரன்தான் வணக்கத்திற்குரியவன்' என்று சட்டம் இயற்றினால் தவிர, கொள்ளைக்காரன் கொள் ளைக்காரன்தான், ஐயா. நியாயாம் தெரிந்தவர்கள், சிந்த னையாளர்கள் கர்நாடகத்தில் யாருமே இல்லையா என்ன? கிவிடும்.

இன்று ஒரு கும்பல் மனோபாவம் மேலோங்கி நிற்கிறது. நியாயம் தெரிந்தவர்கள் அஞ்சிப் பின்வாங்க வேண்டிய நிலை. இது எங்கேயும் நேர்வதுதான். 1965இல் இந்திப் போராட்டத் தில் எல்லாரும் 'தமிழ் வாழ்க' என எழுதி வைத்துக்கொண்டு ஏமாற்றவில்லையா? இன்று வரை அது ஒரு பெயர்ப் பலகை வாசகமாகவே நின்றுபோய்விடவில்லையா? அதுபோலத்தான்.

நீதி வலிமையோடு நிலை நாட்டப் படும்போது நியாய வான்கள் தம் மக்களை வழி நடத்துவார்கள்.

இன்று அதிமுக அரசு சட்ட மன்றத்தில் 'தமிழ்நாடு சுயாதிக்கமுள்ள தனி நாடாகிவிட்டது' என்று ஒரு மசோதா வை நிறைவேற்றினால் என்னாகும்?

அரசு கலைக்கப்படும்; சிறைகள் நிரப்பப்படும்.

ஆனால், இந்தச் செயலில் உள்ள குறைந்த பட்ச நேர்மை யாவது கர்நாடகத்தின் செயலில் உள்ளதா? 'உண்மையைச் சொன்னால் அது துரோகம்; அதையே மறுதலையாக்கிச் செய்தால் வெறும் மௌனம்.' இது என்னய்யா நியாயம்?

ஒன்று, அவர்கள் தண்ணீர் விடவேண்டும். இல்லையேல் காவிரியின் சங்கமத்திற்காகக் கர்நாடக எல்லையில் கடலை வெட்டிக்கொள்ள வேண்டும்.

தமிழகம் பிறன் கழிக்கும் சிறுநீரின் வடிநிலமல்ல.

படிப்பகம்

www.padippakam.com

# நாற்று

எவையெல்லாம் நம்மை ஒருமைப்படுத்தி, நியாய மான சிந்தனைக்கு விதை தூவிப் போகுமோ, அவை யாவும் இலக்கியமாகும் படைப்புகள்தாம். அவை கதையானால் என்ன, ஒரு காற்புள்ளியா னால்தான் என்ன!

∴

இருவருக்கிடையே புரிதல் சரியாக இருந்தால் மதில்கூடத் தடையாக முடியாது. அல்லாமல் போனால் ஊடே தவழும் காற்றுகூட மதிலாகப் பிரித்துவிடும்.

∴

எவனொருவன் தான் போதிப்பதெல்லாம் தன் னைக் குறித்துத்தான் என்னும் சுரணையைப் பெறுகிறானோ, அவனே சுவடுகள் பதிக்க நடக் கிறவன். பிறனெல்லாம் காற்றை மாசுபடுத்த மூச்சு விடுகிறவன்தான்.

∴

ஒன்றை அனுமானிப்பதே அதனை உறுதிப்படுத் திக் கொள்ளத்தான். அனுமானமே உறுதிப்பா டாவதில்லை. ஆனால் மத நம்பிக்கைகள் காலப் போக்கில் அனுமானங்களையே உறுதிப்பாடுக ளாக்கிவிடுகின்றன. அதன் காரணமாக நாமும் தேடுபொருளையே மறந்து, வழிநடை வருத்தம் பாராட்டுவதே வாழ்க்கையெனக் கொண்டோம்.

∴

புழக்கத்திலிருக்கும் வழக்கத்தை உடைத்துப் புதி தாய்ப் படைக்க வருகிறவர்களைப் பார்த்து பிர மித்துப் போகாதீர்கள். உங்கள் பிரமிப்பு அடங் குவதற்கு முன்பே அவர்கள் அதை வழக்கமாய் மாற்றியிருப்பார்கள். மனித வழக்கம் அப்படி.

∴

எவனும் தனக்கு மேலே இருக்கிறவனோடுதான் சமத்துவம் கோருகிறான். எவன் தனக்குக் கீழே இருக்கிறவனோடு கோராமலே சமத்துவம் பாராட் டுகிறானோ, அவனே சமத்துவம்கோரத்தக்கவன்.

படிப்பகம்

www.padippakam.com

Kavithaasaran, Aug. 1993. Regd. No. TN/MSN/746
CREATIVE LITERARY MONTHLY IN TAMIL. R. Dis. 5479/90

படைப்பிலக்கிய வெளியீட்டாளர்கள்:

**மூசா இலக்கியம்**

**MUSA ILAKKIYAM**

31, டி.கே.எஸ். நகர், சென்னை-600019

**சந்தாதாரர் ஆகுங்கள்**
**சந்தாதாரர் ஆக்குங்கள்**

படிப்பகம்